
மனீஷா பஞ்சகம்



ஜகத்குரு ஆதி சங்கரர்

ஐந்து பாடல்களிலே அளித்த நிச்சயித்த அறிவு

தமிழில்

மீ. ராஜகோபாலன்



இடரெதுவும் இனியேது இடபா முகஞானச்

சுடரறிவே முழுமுதலே சுயமான பேரொளியே!

தடமிதென உபநிடதத் தத்துவத்து வித்தகத்தில்

படமெனவேப் பதியமிடப் பரம்பொருளே அருள்வாயே!





குருவே துணை

எழுதிய மொழியில் உண்மை

இருக்கட்டும், கருத்தின் ஆழம்

எளிமையில் மனதின் உள்ளே


இறங்கட்டும், இதனால் ஞானம்

வழுவிய பாதை என்றே

வளரட்டும் வாழ்க்கைப் பாதை!

வரமிது குருவே தருணம்,

வழங்கட்டும் சரணம் சரணம்!



குருவே துணை

நான்யார் என்ப தாய்ந்து

நானில மெல்லாம் பாய்ந்த

தான்தாள் திறந்த தேவே!

தன்னுள்ளே பிரம்ம ரூப

மானவா! ஞானக் கோவே!

மனிதரும் இறைவ னாகும்

ஞானா நந்த மான

ரமணரே! சரணம்! சரணம்!

உ

முகவுரை

சம்ஸ்கிருத மொழியில் 'மனீஷா' என்றால் நிச்சயிக்கப்பட்ட அறிவு என்பது பொருள். ஐயமின்றி, முற்றிலும் ஆய்ந்து, முழுதாய் உணர்ந்து வரையப்பட்ட தீர்மானமே மனீஷா எனப்படும். அவ்விதமான அறிவு, வெறும் நம்பிக்கையினாலோ, ஏதேனும் கொள்கைப் பிடிப்பினாலோ, அல்லது எந்தவிதமான உணர்ச்சி நிர்ப்பந்தங்களுக்காகவோ ஏற்றுக் கொண்ட முடிவு அல்ல.

'பஞ்சகம்' என்ற சொல் ஐந்து பொருட்களின் அடக்கம் என்பதைக் குறிக்கிறது. இங்கே ஐந்து என்பது, பகவான் ஆதிசங்கரர் இயற்றிய ஐந்து மந்திரங்களைக் குறிப்பதால், 'மனீஷா பஞ்சகம்' என்பதற்கு ஐந்து மந்திரத்தில் அறுதியிட்ட உறுதி மொழி எனப் பொருள் கொள்ளலாம்.

அது என்ன அறுதியிட்ட உறுதி மொழி! எது சங்கரரது தீர்மானமான, நிச்சயிக்கப்பட்ட அறிவு ?

'ஒவ்வொரு உயிர்களுக்குள்ளும் இருக்கும் ஜீவாத்மாவும், அகில உலக சாட்சியாக இருக்கும் பரமாத்மாவும் அடிப்படையில் ஒன்றே. இந்த அத்வைத அருஞ்ஞானத்தை அடைந்து அதில் எப்போதும் நிலைத்தவர், உலக வழக்கில் புலையனாகவோ, மறை ஓதும் அந்தணனாகவோ எவராக இருந்தாலும், அவரே எனது குரு, எனது ஒளி, தேவர்களாலும் வணங்கப்படும் ஆசான்' என்பதே ஜகத்குரு ஆதி சங்கரரின் மனீஷா. இதுவே இம்மந்திரங்களின் மூலக்கரு.

இம்மந்திரங்களை அவர் படைத்த காரணம் என்ன? காலக் கட்டாயம் என்ன? இதனை ஆய்ந்துணர்வதன் மூலம் நாம் அடையும் பலன் என்ன? இக்கேள்விகளுக்கான விடையினை அடையும் முயற்சியே, மனீஷா பஞ்சகம் எனும் நூலைப் பயிலும் பயிற்சி; அதில் புதைந்துள்ள ஒப்பற்ற உபநிடதப் பேருண்மைகளை அடையும் வளர்ச்சி.

உபநிடதங்கள் வேதங்களின் முடிவான வேதாந்த சாரத்தில் அடங்கும். அவை ஆத்மவித்யா எனப்படும் தன்னுணர் ஞானம். தைத்திரிய உபநிடதம் ‘ஸத்யம் ஞானம் அனந்தம் பிரம்மம்’ என்பதன் மூலம், நிலையான பொருளாய், முழுதான அறிவாய், முடிவில்லா ஆனந்தமாய் தன்னுள்ளே ஆத்மவடிவாக, பிரம்மம் இருக்கின்றது. இவ்வாறாக ஞானிகள் தாங்கள் அனுபவித்து உணர்ந்த அரிய உண்மைகளை, அங்கேயே 'வெட்டொன்று துண்டு இரண்டு' என்பது போல நேரடியாக அறிவிப்பதும், அல்லது மறைத்துக் கொடுத்த மாணிக்கமாய் புதைத்துக்

கொடுப்பதும், உபநிடதங்களின் பெருமை.

தன்னை உணர்ந்த தவசிகளால் அளிக்கப்பட்ட தத்துவப் பாடங்கள் இந்த உபநிடதங்கள். அவை தன்னை அறிய முயலும் மாணவர்களுக்கு மட்டுமே படைக்கப்பட்ட விருந்து. அவற்றைப் பயிலும் தகுதியும், கிடைக்கும் உண்மைகளை உணர்ந்து கொள்ளும் பக்குவமும் உள்ள மாணவர்களுக்கே அவை பொருந்தும். மேலும், உபநிடதங்கள், எளிமையாகவும், முறையாகவும் வடிவைக்கப்பட்டு, தானாகப் புத்தகத்தை வைத்துப்படித்து அறிவதற்காக அமைந்தன அல்ல. அவை தக்க குருவின் மூலமே கற்று, உணர்ந்து விளங்கிக் கொள்ள வேண்டிய உண்மைகள்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் உண்மை அறிவினை நோக்கியே, உணர்ந்தும், உணராமலும் தமது வாழ்வில் எல்லாச் செயல்களையும் செய்கின்றனர். இதனாலேயே மனிதப் பிறவி மற்ற பிறவிகளை விட உயர்ந்தது என்பது சான்றோர் வாக்கு.

आहार-निद्रा-भय-मैथुनानि सामान्यमेतत् पशुभिर्नराणाम्।
ज्ञानं नराणामधिको विशेषो ज्ञानेन हीनाः पशुभिः समानाः ॥

ஆஹார-நித்$_3$ரா-ப$_4$ய-மைது$_2$னானி ஸாமான்யமேதத் பஶுபி$_4$ர்னராணாம்।
ஜ்ஞானம்' நராணாமதி$_4$கோ விஶேஷோ ஜ்ஞானேன ஹீனா: பஶுபி$_4$: ஸமானா: ॥

முதல் வரி:

ஆஹாரம் = உணவு; நித்ரா= உறக்கம்; பயம் = அச்சம்; மைதுனானிம் = காமம்; அன்ய மே = ஆகியனவே; தத் = இப்படியான பழக்கமாக; பசு பிர் நராணாம் = விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும்;

இரண்டாம் வரி:

ஞானம் நராணாம் = மனிதர்களுடைய அறிவு; அதிகோ = அதிகமானது; விசேஷா = உயர்வாக வேறுபட்டது; ஞாநேந = அத்தகைய ஞானத்தை; ஹீந: = வீணாக்கினால்; பசுபிஸ் ஸ்மான: = மனிதன் விலங்கைனைப் போலவே ஆவான்.

எல்லா உயிர்களுக்கும், உணவு, உறக்கம், பயம், காமம் முதலிய தருமங்கள் பொதுவாக இருப்பினும், மனிதன் மட்டுமே தன்னை அறியும் ஞானத்தினைப் பெறுவதற்கு வலிமை பெற்றவன். அந்த உயர்ந்த அறியைப் பயன்படுத்தாவிடில்,

மனிதனும் விலங்கினைப் போலவே ஆகிறான் என்பது இதன் பொருள்.

ஆத்ம வித்யா எனும் தன்னுணர்வறிவே, மனிதர்கள் அடையவேண்டிய உயர்வான அறிவு. ஞானம் எனும் சொல் அந்த உயர்ந்த அறிவினை மட்டுமே குறிக்கின்றது.அமரகோஸம் எனும் வடமொழிக் காவியம் 'ரமாக்ஷே தீர் ஞானம் அன்யத்ர விஞ்ஞானம்' அதாவது, தன்னை அறிவதே ஞானம் என்றும், உலக விவகாரங்களை அறிவது விஞ்ஞானம் என்று கூறுகிறது. அத்தகைய ஞானத்தை அளிப்பவரே குரு. அந்த ஞானத்தினை உணர்ந்து அதன்படியே உலகிற்குத் தம் வாழ்க்கை முறையால் வழிகாட்டியாய் இருப்பவரே ஆச்சார்யர் எனப்படுவார்.

'ஆச்சார்யா' என்ற சொல், சம்ஸ்கிருதத்தில் 'ஆச்சாரம்' எனப்படுகின்ற வேத தருமம் சார்ந்த வழியினை, எவர் தமது நடத்தையாலும், உபதேசத்தாலும் பிறருக்கு வழிகாட்டியாக இருக்கின்ற பணியைச் செய்கின்றாரோ அவரையே குறிக்கும். அத்தகைய ஆசான், எப்போதும் விழிப்புடன் இருந்து, அதாவது தனது ஞானத்திலிருந்து சிறிதும் வழுவாத வாழ்க்கையை நடத்திக் கொண்டு, கிடைக்கும் வாய்ப்புக்களை எல்லாம் தமது சீடர்களுக்கு வழிகாட்டும் வகையாகப் பயன்படுத்திப் பணியைச் செய்வது கடன். அப்படி ஒரு வாய்ப்பில் வாய்த்ததே ஆதி சங்கரரின் 'மனீஷா பஞ்சகம்' எனும் இந்த அரிய ஐந்து ஸ்லோகங்கள் என்று பெரியோர்கள் கூறுவர்.

ஆதி சங்கரர் அவர்களது வாழ்க்கையில், மனீஷா பஞ்சகம் புனைவதற்குக் காரணமான ஒரு சம்பவம் நடந்ததாகக் கருதுவதும் உண்டு.

ஓர் நாள் சங்கரர் தமது சீடர்கள் முன்னும் பின்னும் சூழ்ந்து வர, தமது கங்கைக் குளியலை முடித்து, வட இந்தியாவில் உள்ள காசி நகரத்தின் ஒரு குறுகலான விதியிலே நடந்து கொண்டிருக்கிறார். அப்போது, எதிரே, கலைந்த ஆடையும், அழுக்கான தோற்றமும் கொண்டு, கையிலே நாய்களைக் கோர்த்து இழுத்துக் கொண்டு, நாயினைப் புசித்து வாழும் புலையன் ஒருவன் வருகின்றான். முன்னே செல்கின்ற சங்கரரின் சீடர்கள் புலையனிடம் 'விலகிப் போ, விலகிப் போ' எனப் பதட்டமும், வெறுப்புமாய்க் கூறுகின்றனர்.

ஜாதி பேதங்களால், தீண்டாமை எனும் தீய நோய் பரவி இருந்த காலம் அது. புலையனோ, சீடர்களின் செயலுக்குக் குருவே காரணமாக வேண்டும் எனத் துணிந்து, சங்கரரிடம் கேட்கிறான்.

'ஏ, துறவிகளின் மேலோனே? எதனை விலகச்சொல்கிறாய்? இந்த உடலையா? இது சோற்றாலான பிண்டம் அல்லவா? சடப் பொருள் அல்லவா? அது எப்படி விலகும்? அல்லது உள்ளிருக்கும் சைதன்யமான அறிவினை விலகச் சொல்கிறாயா? அதுவும், உன்னுள்ளும், என்னுள்ளும், எங்கும் பரவி இருக்கும் ஆன்மா அல்லவா? இதனை நீ அறியாயோ? ஆகாய விளக்கான சூரியனின் பிரதி, கங்கையில் வீழ்ந்தால் என்ன, புலையன் வசிக்கும் வீதியில் தேங்கிய சாக்கடை நீரில் வீழ்ந்தால் என்ன? சூரியனுக்கா இழுக்கு? பரவிய ஆகாயம், மண்

பானைக்குள் இருந்தாலும் பொன் பானைக்குள் இருந்தாலும் வேறுபட்டது அல்லவே? இத்தகைய ஞானத்தை அறிந்திருக்க வேண்டிய உமக்கு, இவன் புலையன், இவன் பிராமணன் எனும் பேதம் எவ்வாறு வந்தது?' என்று கேட்கிறான்.

இதை விட வேறு என்ன அரிய வாய்ப்பு வேண்டும்? ஆதிசங்கரர் ஜகத்குரு அல்லவா? தமது மொழியாலும், செயலாலும் உலகிற்கு வழிகாட்ட வந்த மஹான் அல்லவா? உடனேயே, கல்விச் செருக்கு எனும் 'வித்யா கர்வம்' எதுவும் இல்லாமல், அப்புலையனை, அவ்விடத்திலேயே, அப்பொழுதிலேயே பணிந்து, 'அத்வைத ஞான நிஷ்டையில் இருக்கும் தாங்களே எனது குருவாய் வந்த ஒளி' என நமஸ்கரித்து, இந்த மனீஷா பஞ்சகம் எனும் அற்புதப் படைப்பை அளிக்கிறார்.

செல்வச் செருக்கு என்னும் நோய், செல்வங்களை இழக்கும்போது போய்விடும். ஆணவம் பொருட்களால் என்றால், அப்பொருட்கள் கைவிட்டுப் போகும்போது, ஆணவமும் தொலைந்து போவது இயற்கையே.

ஆனால் கல்விச் செருக்கு அப்படி அன்று! கல்வி அறிவு என்பது 'வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது', கொடுத்தால் குறையாது. அள்ளித்தர, அள்ளித்தர அதிகம் வளர்கின்றதல்லவா அறிவு! அதனால் கலிவ்யால் கர்வம் ஏற்பட்டால், அந்தக் கர்வம் இழப்பது என்பது மிகவும் கடினம். அதனாலேயே கற்போருக்குக் கர்வம் என்பது வாராது காப்பது என்பது மிகவும் முக்கியம். உண்மையான அறிவின் அடையாளம், ஆணவமற்ற பணிவு. ஞானத்தின் அடையாளம் அடக்கம்.

இந்தச் சம்பவத்தினைப் பலரும் பலவிதமாய்க் கூறுவர். இது ஒரு கற்பனைக் கதை என்பர் சிலர். சிலர், இது உண்மையே என்றும், ஆதி சங்கரர் அப்போது முற்றும் ஞான நிஷ்டையில் பயிற்சி பெறவில்லை என்றும், அவர்தான் விலகிப்போ என்று அறியாமல் சொல்லி விட்டார், தெரியாமல் தவறி விட்டார், யானைக்கும் அடி சறுக்கும் என்றெல்லாம் கூறுவர். வேறுசிலர், இது உண்மையே, ஆனால், அங்கே புலையனாக வந்தது கடவுளாகிய பரமசிவனே என்பர்.

எனது அறிவு மிகச்சிறிதென்றாலும், ஆதி சங்கரரிடம் எனதன்பு மிகப் பெரிதென்பதாலும், பகவான் சங்கரர் இளவயதிலேயே ஞானநிஷ்டை அடைந்தவர் என்பதற்குப் பல சான்றுகள் இருப்பதாலும், சங்கரர் தமக்குக் குருவாக வந்த எவரையும் இறைவனாகவே பார்த்தார் என்பதாலும், உண்மையான ஆச்சாரியக் கடமையைச் செய்தவரான பகவான் சங்கரர் தமது சீடர்களுக்கும் அதன் மூலம் உலகுக்கும் பாடம் கற்பிக்கவே, தாமே சீடர்களின் தவற்றுக்குப் பொறுப்பேற்று, புலையனை அவனது தோற்றத்திலேயே குருவாக, அவ்விடத்திலேயே ஏற்று வணங்கி, இவ்வரிய ஞானப் புதையலை அளித்தார் என்று சமர்ப்பிக்கின்றேன்.

புலையன் பரசிவனார் என்பதாலேயே ஆதி சங்கரர் வணங்கினார் என்பது, இங்கே

அவரது நிச்சயித்த அறிவாகக் கூறப்பட்ட கருத்துக்குப் பாதகமாகவே முடியும். கதையோ, வரலாறோ, இதன் ஆராய்ச்சி நமக்கு முக்கியமல்ல. மாறாக, என்ன பாடங்களை இந்த மனீஷா பஞ்சகம் நமக்குத் தெளிவிக்கிறது, அதன்மூலம் நாம் அடையும் பலன் என்ன என்பதே நமது வேட்கையாக இருக்க வேண்டும்.

பாரத பூமியெங்கும் பாகுபாட்டால் சமுதாயம் பிளவுபட்டிருந்த காலம் அது. பிறப்பால் பேதம் காணுகின்ற ஜாதிப் பாகுபாட்டின் தீவிர ஆக்கிரமிப்பினால், தீண்டாமை, உயர்வு-தாழ்வு பேதங்கள் சமுதாயத்தைத் துண்டுபோட்டுக் கொண்டிருந்த காலம். அன்றும், இன்றும் சமுதாயத்தில் பிரிவுகளும் வேறுபாடுகளும் இருப்பத்தைக் காண முடிகிறது. இவற்றில், மிகவும் முக்கியமாகத் தவிர்க்கப் பட வேண்டியது '**ஜாதித்வேஷம்**' அதாவது பிறப்பினால் ஜாதி எனும் ஆதாரமில்லாத பாகுபாடும் அதனால் கற்பனையாய் ஏற்படுகின்ற வேற்றுமையும், வெறுப்பும் ஆகும்.

'ஜாதி' என்ற சொல்லுக்குப் பிரிவு என்பது பொருள். உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் இயற்கையில் வேற்றுமை இருப்பதும், இவ்வகையான வேற்றுமைகளை நாம் நமது வாழ்வில் கையாளவேண்டிய அவசியம் இருப்பதும் உண்மைதான். இத்தகைய வேற்றுமைகளுக்கு சம்ஸ்கிருத மொழியில் '**வ்யவஹாரிஹம்**' என்று பெயர். உதாரணமாக, மாங்கனி என்றால், அதிலே பல ஜாதி மாம்பழங்கள் இருக்கின்றன. தானியங்களிலே பல பிரிவுகள் உள்ளன. நமது உடலில் ஓடும் உதிரத்திலும், பலவிதப் பிரிவுகள் உள்ளன. இதுபோன்ற பிரிவுகளை உலக வாழ்க்கையில் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டியது அத்தியாவசியமே.

எந்த ஒரு பொருளையும், செயலையும், பகுத்தறியும் போது அவற்றிலே பிரிவுகள் ஏற்படுவதும், அவற்றைத் தொகுத்துணரும் போது, அவ்வேற்றுமைகளெல்லாம் ஒற்றுமையில் மறைவதையும் பார்க்கலாம். உதாரணமாக, விரல்கள் மாறுபட்டிருந்தாலும், அவ்வேறுபாடுகள், கை எனப் பார்க்கையில் மறைவது போல, தமிழர், தெலுங்கர் எனும் பிரிவு, இந்தியர் எனப்பார்க்கையில் மறைவதுபோல, எல்லாமே பஞ்ச பூதங்களான உணவால் ஆக்கப்பட்ட உடல்களால் ஆனதென்னும் தொகுத்துணர்வுப் பண்பால், எல்லா உடல்களின் வேற்றுமையிலும் ஒற்றுமை தெளிவது நிஜம். ஆகையால், '**வ்யவஹாரிஹம்**' எனும் இத்தகைய வேறுபாட்டை நாம் அனுமதித்து, அனுசரித்து வாழ்க்கையில் நடப்பது முக்கியமே.

மற்றொரு வகை வேறுபாடு, சம்ஸ்கிருதத்தில் '**ப்ரதிபாஸிகம்**' என்று சொல்லப்படுகிறது. இது, வியவஹாரிகம் ஏதுமற்ற நிலையில், மனதுக்குள்ளேயே வேற்றுமை எனும் கற்பனையைச் செய்து கொண்டு, அதனால் பிரிவு காண்பது ஆகும். பிறப்பினால் உயர்ந்த ஜாதி என்கிற அறியாமை ப்ரதிபாஸிகம் ஆகும். அதாவது பிறப்பால் ஜாதிபேதம் என்பது கற்பனையில் வளர்த்துக் கொண்ட பாகுபாடு. அதனால், தான் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் எனும் மாறுபட்ட மனப்பான்மை நோயுடையவர்களாகச் சில மனிதர்கள் இருந்திருக்கிறார்கள், இன்னும் இருக்கிறார்கள். இந்தப் ப்ரதிபாஸிகப் பாவம், உலகில் உள்ள எல்லா

நாடுகளிலும், ஏதேனும் ஒருவகையில் மனிதர்களிடையே பிரிவினையை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாகப் பாரத நாட்டில், பிறப்பால் உயர்வு, தாழ்வென்ற ஜாதி பேதம், வேதங்களின் உண்மையறியாதவர்களால் பரப்பப்பட்டு, நோயாக் கிடக்கிறது. இத்தகைய பேதங்களைக் களையவும், மனித உலகுக்கெல்லாம் மருந்தாக இருக்கும் பொதுவான உபநிடத உண்மைகளை விளக்கி, வரும் காலம் தழைக்க, தம் செயலாலும், மொழியாலும் ஒரு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டவும் அல்லவோ ஜகத்குரு ஆதி சங்கரர் தமது குறுகிய கால வாழ்க்கையில் பெருகிய நற்பணிகளைச் செய்தார்!

அவ்வகையிலே, இந்த மனீஷா பஞ்சகத்தில் தெளியும் பல பாடங்களில், ஜாதித் துவேஷத்தைக் களையவேண்டும் என்பதொரு முக்கியமான நீதி.

‘ஷூத்ரா’ எனும் சொல்லினால் பிறவியில் கீழ்ப்பட்டவர்களாகவும், ‘பிராமணர்’ எனும் சொல்லினால் பிறவியில் மேம்பட்டவர்களாகவும் மனிதர்களைப் பிரித்துள்ளதாக எண்ணுவது அறியாமை. இப்பாகுபாடு வேதங்களினால் திணிக்கப்பட்டது என்ற உண்மைக்குப் புறம்பான கருத்து அறியாதோரால் பரவப்பட்டு, பலருக்கும் வேதங்கள் உலகப் பொதுவியல் என்பதும், அதிலும் வேத உபநிடதங்கள், மனித சமுதாயம் அனைத்துக்குமே ஆதார அறிவைக் கொடுத்து உய்விக்கும் உண்மைகள் என்பதும் தெரியாமலேயே இருக்கிறது.

வேதங்கள் உண்மைக்குப் புறம்பாக எதனையும் கூறுவதில்லை. அரைகுறையாய்ப் பயின்றவர்கள், அறியாதார் அறியாமையை மூலதனமாக்கிக் கற்பித்த கற்பனையே இப்பாகுபாடு.

அப்படி என்றால், எதற்காக 'ஷூத்ரா' மற்றும் 'பிராமணர்' எனும் பேதமைப்படுத்துகின்ற வார்த்தைகளை வேதங்கள் கொடுக்க வேண்டும்? அந்த வார்த்தைகளின் உண்மையான பொருளும், நோக்கமும் என்ன?

உலகில் உள்ள எல்லா மனிதர்களையும் பிறப்பால் சமத்துவமாகவும், பின் அவர்கள் ஏற்கும் வாழ்க்கைப் பாதைக்கு ஏற்ப மூன்று விதமாகவும் அடையாளம் காட்டுவதாக ஒரு மறை மந்திரம் மனிதர்களை நான்கு பிரிவாக அமைக்கிறது.

जन्मना जायथे शूद्र: कर्मणा जायथे द्विज: ।

वेदाद्यायि भविप्रोः ब्रह्म जानाथि ब्रह्मणः ।।

ஜன்மநா ஜாயதே ஷூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ:

வேதாத்யாயி பவேதிப்ரோ ப்ரஹ்மா ஜானாதி ப்ராஹ்மண:

முதல் வரி:

ஜன்மநா = பிறிவியில்; ஜாயதே ஷூத்ர: = தோன்றுவரெல்லாம் ஷூத்ரன் (எனும் தர்மம் அறியாப் பிரிவு) ; கர்மணா = (முறையறிந்து செய்யும்) செயலால்; ஜாயதே த்விஜ: = தோன்றுவது இரண்டாம் பிறவியாளன் (அதாவது, புதிய வாழ்க்கையினைத் தொடங்கியவன்);

இரண்டாம் வரி:

வேத அத்யாயி = வேதங்களைப் முறையாகப் படித்து; பவதே விப்ரோ: = அதன்படி நடப்பவன், விப்ரன் எனும் அந்தணன்; ப்ரஹ்மா ஜானாதி ப்ராஹ்மண: = பிரம்மத்தை அறிந்தவன் மட்டுமே பிராமணன்

இதன் கரு என்ன? ஒருவரின் பண்பும் வாழும் முறையுமே அவரைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும்.

பிறப்பில் எல்லா மனிதர்களும் ஷூத்திரராகவே பிறக்கிறார்கள். ஷூத்திரன் கட்டுப்பாடுகள் இல்லாமல், தக்கது எது, தகாதது எது என்று அறியாமல், உடலும் மனதும் வேண்டுவனவற்றை எல்லாம் வேண்டும் போது செய்து கொண்டு இருப்பவன். பிறந்த குழந்தைகள் எல்லாருமே இவ்வாறு இருப்பதால், நாம் அனைவருமே ஷூத்திரராய்த்தான் பிறக்கிறோம்; ஆதலால் **பிறப்பில் எல்லோரும் சமமே** என்பதை அறிய வேண்டும். அவ்வாறு இல்லாமல், கற்பதன் மூலம், எது நமது தருமம், எது தக்கது, எது தகாதது, எது நமது கடமை என வாழும் வகையினை அறிந்து கொள்வதால், ஷூத்திரனாகக் கருதப்பட்டவன், தமது வாழ்க்கையில் மாற்றத்தைக் காண்கிறான். இம்மாற்றம் மிக முக்கியம் என்பதால், இதனை மறு பிறப்பாகவே கருதுவர் நம் சான்றோர்.

அதனாலேயே, கல்வித் தொடக்கம் ஏற்றுக் கற்றுத் தேர்ந்து, தருமப்படி வாழ்பவர்களை, ஷூத்திரரிலிருந்து வேறுபடுத்தி, 'த்விஜர்' - அதாவது த்வி என்றால் இரண்டு, ஜ என்றால் ஜன்மம், பிறவி - இருமுறை பிறந்தவர் என்று அழைப்பர். வழக்கத்தில், இக்கல்வி முதலில் பெற்றோரிடம் தொடங்கினாலும்,

தக்க ஆசிரியரிடம் சேர்ந்து கல்விப் பயிற்சி பெறுவதாலேயே உலகவியலும், தன்னையறியும் ஆன்மவியலும் ஒருவருக்கு அறிவாய் ஆகிறது.

நல்லது எது தீயது எது என அறிந்து, தான் ஏற்ற தொழிலுக்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்ற தருமப்படி வாழுகின்ற 'த்விஜர்' களில் சிலர், இதனினும் மேலே உய்யும் பொருட்டு, வேதங்களின் உண்மைகளை ஆய்ந்துணரவும் அதன்படியே தாம் எடுத்துக்கொண்ட தருமத்துக்கேற்ப நடந்து, வேத விதிகளின்படி, ஆன்ம ஞானமே குறிக்கோளாக ஏற்று, தங்கள் வாழ்க்கை வழிமுறைகளை அமைத்துக் கொள்வார்கள். அவர்கள் 'விப்ரர்' என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றார்கள்.

தீர்க்கமான அறிவாலும், யோகத்தாலும் ஆன்ம விசாரணையில் பலனடைந்து, பிரம்மம் எனும் பரமாத்ம ஞானம் அடைந்தவர் எவரோ அவரே 'பிராமணர்' என அழைக்கப்படுவர். பிறவியாலோ, வெளி வேடத்தாலோ, முற்றுப் பெறாத கல்வியாலோ, எவரும் தாம் விப்ரன் என்றோ, பிராமணன் என்றோ கருத முடியாது.

குழந்தைகள் அறியாமையினால் ஷூத்ரனாகக் கருதப்படுகிறது. ஆனால், வளர்ந்தபின், கல்வி கற்றிருந்தாலும், பிறகு தரும வழி நடக்காமல், அதர்மச் செயல்களைச் செய்வானேயாகில், அவனும் ஷூத்திரனாகக் கருதப்படுகின்றான். 'ஷூத்திர' எனும் சொல்லுக்கு, சோகம் அல்லது துயரமுடையவன் என்பது பொருள். எதனால் துயரமுடையவனாக இருக்கிறான் என்று சொன்னால், குழந்தையாய் இருக்கும் போதுள்ள அறியாமையாலும், வளர்ந்த பின் எது உண்மையான, முழுமையான இன்பம் என்று அறியாமலும், அந்த ஞானம் வருவதற்கான கல்வியோ, தருமங்களோ, கடமைகளோ ஏற்காமலும் இருக்கின்ற காரணத்தாலேயே ஆகும். அதனால் முழுமையான இன்பம் அடைவதற்கான அறிவோ, வாய்ப்போ இல்லாது போகிறது.

நந்நடத்தையினாலும், தான் ஏற்ற கர்ம, தர்ம நியாயங்களினாலும், எல்லாக் குழந்தைகளும், த்விஜன், விப்ரன், பிராமணன் எனும் மாறுதலை விரும்பியே ஏற்று வளர்கின்றன. இந்தப் பிரிவு கற்பனையால் காணும் ப்ரதிபாசிகம் அன்று. இங்கே பிறப்பு எதற்கும் பொறுப்பு அல்ல! தீண்டாமை என்ற தீங்கு ஏதும் இல்லை! ஜாதி எனும் அநீதி இல்லை! ஆனால், வாழ்க்கை என்ற பொறுப்பு இருக்கிறது. தருமம், கருமம் என்ற காரணங்கள் காரியங்களுக்கு ஆதாரமாக இருக்கிறது! எல்லா மனிதர்களும், அவரவர் பாதையில் உய்யும் வகை இருக்கிறது. வாழ்க்கையில் பயணிக்கும் பாதை பலவாக இருப்பினும், அப்பாதைக்கேற்ற பண்பே, ஒருவரை மேலோனாகக் காட்டுகின்றது. இதனால் என்ன நன்மை என்றால், மனித ஒழுக்கமே ஒருவரது உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலைக்குக் காரணமாகிறது. அதாவது, **ஒருவரை மேலோராக்குவது அவரது பண்பும் நடத்தையுமே அன்றி வேறு அல்ல** என்பதாகும்.

இப்படி எல்லாவற்றையும் பகுத்தறிதல் எதனில் முடிய வேண்டும் என்றால், அனைத்தையும் தொகுத்துணரும் ஞானத்திலேதான்! அதனால், யாவையும் ஒன்றே, எல்லா உயிர்களும் ஆத்மாவினால் பிரகாசிக்கப்படுவதென்றும், அதனால்

‘யாதும் ஒன்றே, யாவரும் கேளிர்’ எனும் சம நோக்குப் பார்வை வரவேண்டும். இதுவே அத்வைத ஞானத்தின் ஆதார பலன். அ + த்வைதம் என்பது இரண்டற்ற ஒருநிலை என்பதே ஆகும். எதனால் இவ்வாறான இரண்டற்ற நிலை எளிதில் உணரப்பட முடியாமல் இருக்கிறது?

வேதங்கள், நமது பார்வையை இரண்டுவிதமாகக் காட்டுகிறது. ஒன்று ‘காரண திருஷ்டி’, அதாவது ஆதார அறிவில் நோக்கம்.. எது விளைவுக்குக் காரணமோ அதை அறிவது காரணப் பார்வை. மற்றது ‘காரிய திருஷ்டி’ அல்லது விளைவினை அறியும் நோக்கம். இது வெளிவிகார அறிவு. எடுத்துக்காட்டாக, பொன் நகைகளுக்கு ஆதாரப் பொருள் தங்கம் என்பதும், ஆதார கர்த்தாவின் திறனே அதனை வேறுபாடான நகையாக்கிறது என்பதும் ஆதார அறிவு. பலவிதமான அமைப்புக்களில் இருக்கும் நகைகளைப் பார்ப்பதும், அதன் வேறுபாடுகளை ரசிப்பதும், ஏற்பதும் வெளிவிவகார அறிவு இது விளைவினை அறியும் நோக்கம்.

ஆதார அறிவு இருந்தால், வெளிவிவகாரங்களின் வேறுபாட்டைச் சரியான வகையில் கையாளும் திறமை இருக்கும். அதைத்தான் அத்வைத ஞானம் போதிக்கிறது. ஆதார அறிவைப் புரிந்து கொண்டு, விவகார வேறுபாட்டினைக் கையாள வேண்டும். வேறுபாடுகள் உண்மையில்லை என்ற ஆதார அறிவு இருந்து விட்டால், வேறுபாடுகளைக் கையாள்வது, ஒரு நாடகமான, விளையாட்டாக அமைந்து விடுகிறது. அதனால், இந்த ஞானத்துடன் உலக வாழ்க்கையில் ஈடுபடும்போது துன்பம் இல்லை.

இந்த ஞானத்தின் ஒரு அடையாளம், எல்லோரையும் சமமாகப் பார்க்கும் பக்குவம். மனதில் ப்ரதிபாஸிக துவேஷங்கள் ஏதும் இல்லாமல், வ்யவஹாரிக விகாரங்களைக் கையாளும் பொழுதும், ஒன்றேயான ஆத்மாவே எங்கும் விரவி இருப்பதாகவும், அதனால் தானே எல்லாமுமாய், எல்லாமுமே தானாய்க் கருதிகின்ற இயற்கைக் குணம் இந்த சம நோக்கின் அடையாளம். அதுவே உயரிய பிரம்ம ஞானம் வருவதற்கும், அதிலேயே நிலைப்பதற்கும், அவசியமான பண்பு என்றும் மனீஷா பஞ்சகம் போதிக்கிறது.

மேலும், இத்தகைய உயர்ந்த அறிவினைக் கற்றால் மட்டும் போதாது. '**கற்றபின் நிற்க அதற்குத் தக**' என்ற வள்ளுவனின் குறளின்படி, அவ்வறிவின் வழியிலேயே நிரந்தரமாக நிலைக்க வேண்டும். இதற்குப் பெயர்தான் 'ஞான நிஷ்டை'. நிஷ்டை என்பதற்கு வழுவாமல் நிற்றல் எனப் பொருள். கற்றபடி நிற்காவிடில், தருமம் தவறியவராகிறோம். அப்படி ஒரு தவறு ஏற்பட்டால், அதனைத் திருத்திக் கொண்டு மீண்டும் முன்னேற்றப் பாதையிலே போகின்ற பணிவும், விடா முயற்சியும் நமக்கு அவசியம். இதற்கு கல்விச் செருக்கு எனப்படும் 'வித்யா கர்வம்' ஒரு பெரிய தடைக்கல். இதனையும் உடைத்தெறிதல் அவசியம் என்பதையும் மனீஷா பஞ்சகம் தெளிவுறக் காட்டுகிறது.

இந்தப் பயன்மட்டும் இன்றி, ஆதிசங்கரர் தமது நிச்சயித்த அறிவினைத்

தெரிவிக்கும் மந்திரங்களில், உபநிடதங்களின் உயரிய கருத்துக்களை, 'மஹா வாக்கியங்கள்' எனும் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற மந்திரங்களின் சாரத்தை எல்லாம், இந்த ஐந்தே பாடல்களினால், நமக்கு விளக்கி இருக்கிறார். இவை யாவும் ஒப்பற்ற கருத்துக்கள்.

அத்வைத விசாரனை என்பது நம்மை நாமே ஆய்வது. இது ஒரு சுய அறிவியல்! நமது மனவியல்! 'தத்துவம்' எனப்படும் சம்ஸ்க்ருதச் சொல்லே 'தத்' + 'த்வம்' என்றாகி 'அது நீ' எனும் ஒரு மஹா வாக்கியமாகிறது.

மனீஷா பஞ்சகம் என்னும் நூல், அத்தைய அரிய உண்மைகளை அள்ளித் தருகின்ற உயரிய நூல். அதனைப் படித்து, அதன் உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், உண்மையான விருப்பமும், அயராத நோக்கமும், தக்க ஆசிரியரின் துணையும், வழிகாட்டலும் நமக்கு அவசியம். மேலோட்டமாக மட்டுமே படிக்க வேண்டும் என்றாலும் கூட, அதற்கும் நாம் வேதாந்தம் கையாள்கின்ற வார்த்தைகளை, அவ்வார்த்தைகளின் அடிப்படை விளக்கங்களை, அத்வைத தத்துவங்களின் ஆரம்பப் பாடங்களை ஓரளவாவது தெரிந்து கொண்டிருப்பது மிகவும் அவசியம். அவற்றை விளக்குவது, இந்த உரையின் முக்கியக் கரு இல்லை என்றாலும், முக்கியமான ஒரு சில கோட்பாடுகளையும், தத்துவங்களின் சாரங்களையும், இவ்வுரை அறிமுகப்படுத்துகின்றது. இவ்வறிமுகம், ஒருக்காலும் போதுமான அளவிலான வேதாந்த விளக்கமாக இருக்க முடியாது. ஆனாலும், மனீஷா பஞ்சகத்தின் பொருளை அறிவதற்குத் தேவையான, ஒரு சில முக்கியக் கருத்துக்களை சுட்டிக்காட்டுகின்ற அகல் விளக்காக அமைய வேண்டும் என்பதே அவா

புலையன் வினா என்று புலையன் கேட்டதாகக் கருதப்படும் ஸ்லோகங்கள் இரண்டும், பின் ஆதிசங்கரரின் மனீஷா எனும் ஐந்து ஸ்லோகங்களும், இவ்வேட்டில் கோர்க்கப்பட்ட ஞான மலர்கள்.

ஆதி சங்கரர் அறிவுபூர்வமான வினாக்களினாலும், விடைகளினாலும், தெளிவினைத் தருகின்ற ஞானி! மொழிப்புலமையும், கவித்திறமையும் அவரது பாடல்களில், வார்த்தைகளில், எழுத்துக்களில், மறை பொருளை மறைத்தும், படிக்கப் படிக்க மனம் நிறைத்தும் நம்மை உயர்த்துபவை. அவற்றைப் பயின்று அதன்மூலம், மேன்மேலும் உயரிய உபநிடத உண்மைகளைப் புரிந்து உயரவேண்டுமென்றால், மனீஷா பஞ்சகத்தின் ஐந்தாம் பாடலில் வருவது போலத் தெளிந்த அறிவு, குவிந்த மனம், குரு அருள் ஆகிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இவற்றில் ஏதுமில்லாத ஏழையாகிய யான், அன்னாரது மனீஷா பஞ்சகம் எனுமிந்த மாணிக்கப்புதையலைத் தோண்டிப் பார்த்து, எல்லோருடனும் ரசித்துப் பயில வேண்டும் என்று நினைத்தது பேதமையாய் இருப்பினும், இறைவன் காட்டும் பிரேமை எனவே துதிக்கிறேன்.

மனீஷா பஞ்சகத்தினை அனைவரும் படிப்பதால், பெரும் பயன் கிடைக்கும் எனும் குறிக்கோளால், அன்னாரது ஸ்லோகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், தமிழிலும், ஆங்கிலத்திலும், சுருக்கமான உரையினைப் பதிக்க முடிந்தது என் பாக்கியம்.

அறிவாலும், அனுபூதியாலும் பெரியோராய்ப் பலரும், மனீஷா பஞ்சகம் எனும் அருநூலுக்குப் பொருள் நூல் படைத்திருக்கிறார்கள். காஞ்சியின் மஹா பெரியவர் கருணையுடன் இதனை விளக்கியும் இருக்கிறார்கள். அடியேனின் வளரா அறிவின் விளைவால் எழுந்த இந்தச் சிறிய ஏடு, ஓர் சிலரின் பார்வையில் விழுந்து, அதனால், அவர்களுக்கு மனீஷா பஞ்சகத்தின் மூலத்தை மேலும் ஆய்ந்து பயிலவேண்டும், மற்ற பெரியோர்களின் நூல்களையும், விளக்கத்தையும் கேட்க வேண்டும் என்ற உறுதி வருமாயின், என் பணிக்குப் பரிசாக அதுவே அமையும்.

இவ்வுரையின் எல்லாத் தவறுகளுக்கும் என் சிறுமதியைக் கருணையினால் மன்னித்து, சரியான அறிவினைத் தருபவர் எவராயிருந்தாலும் அவருக்கு என் நன்றியால் நனையும் நல்வணக்கங்கள்.

ஆதி சங்கரரது வழித்தோன்றிய குரு பரம்பரையின் கற்பகத்தரு, கலியுகந் தழைக்க வந்த காஞ்சி காமகோடி பீடம், ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரிவாளின் திருவடிகளுக்கும், அத்திருவடிகளே குருவருளெனத் தாங்கி, அன்னார் வழி வந்து அருளாசி தந்துதவும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பாதகமலங்களுக்கும், யான் நூலிதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

மீ. ராஜகோபாலன்,

1-1-2012

புலையனின் வினா

முகவுரையில் கூறியபடி, தம்மை விலகிப்போ எனக் கூறிய துறவிகளையும், அவர்களது தலைவரான ஆதி சங்கரரையும் நோக்கிப் புலையன் கேட்ட கேள்விகள் இரண்டு ஸ்லோகங்களில் உள்ளன. இவையே மனீஷா பஞ்சகம் எனும் மாபெரும் ஞானப் பொக்கிஷத்தை வெளிக் கொணர்ந்த, ஆழத் தோண்டும் கேள்விக் கோடரிகள். இக்கேள்விகளில் ஆத்ம ஞானம் நிரம்பி வழிகின்றது.



अन्नमयाद् अन्नमयम् अथवा चैतन्यमेव चैतन्यात्
यतिवर दूरीकर्तुम् वांछसि किम् ब्रूहि गच्छ गच्छेति

அன்னமயாத்$_3$ அன்னமயம் அத$_2$வா சைதன்யமேவ சைதன்யாத்
யதிவர தூ$_3$ரீகர்தும் வாஞ்ச$_2$ஸி கிம் ப்$_3$ரூஹி க$_3$ச்ச$_2$ க$_3$ச்சே$_2$தி

விலகிடு விலகிடு என்றே வெகுண்டனை எதனைத் தூரே
விலக்கியே வைக்க வேண்டி விழைந்தனை துறவர் ஏரே!
கலமிது உடலோ சடலம் காயமாம் அன்னப் பிண்டம்!
உளமொளி ஆன்ம ரூபம் உன்னுள்ளும் விரிந்த தாகும்!

பொருள்:

துறவிகளில் சிறந்தவனே! எதனை விலகிப்போ, விலகிப்போ எனக்கூறி வேற்றுமையால் தள்ளி வைக்க விழைகிறாய்? உன்னிடமும் என்னிடமும் இருக்கிற உணவாலான இந்த உடலையா? அல்லது ஒருவேளை உள்ளே இருக்கின்ற, அதே சமயம் எங்கும் விரிந்த ஆத்மாவையா?

முதல் வரி:

அன்னமயாத்$_3$ = உணவாலாகிய (என்னுடல்); அன்னமயம் = உணவாலானது (உன்னுடையதைப் போல); அத$_2$வா = அல்லது ஒருவேளை; சைதன்யம் = அறிவுரூபம் (ஆத்மா); ய மேவ = அதுவும் கூட; சைதன்யாத் = (எங்கும் உள்ள) அறிவுரூபம்;

இரண்டாம் வரி:

யதிவர = துறவரில் சிறந்தோனே; தூ$_3$ரீகர்தும் = தள்ளி வைத்தல்; வாஞ்ச$_2$ஸி = மிகவும் விரும்புகின்றாயே; கிம் = யாரை?; ப்$_3$ரூஹி = (வெறுப்பில்) சப்தமிடுகிறாயே; க$_3$ச்ச$_2$ க$_3$ச்ச$_2$ இதி = விலகு, விலகு என;

விளக்கம்:

இப்பாடலில், புலையன் எழுப்புகின்ற கருத்து, ''ப்ரதிபாஸிகம்' எனும் மனக்குழப்பத்தால் கொண்ட பிரிவினை நோயினையும், அதனால் விளையும் சமூக அநீதியையும் பற்றியது. எனினும், புலையனின் கேள்வியில் தெரிக்கும் வார்த்தைகளுக்குள், அளப்பறிய அறிவு அடங்கிக் கிடக்கிறது. புலையனது கேள்வி, நிச்சயமாக, அவனை ஓர் ஞானியாகவே நமக்கு அடையாளம் காட்டுகின்றது. ஏனெனில், வேதாந்த சாரமான, ஆத்ம தத்துவமே அவனது வினாவின் வித்து.

வேதாந்தம் ஆன்மனை அறியும் அறிவினைத் தருவது. உடல்களுக்குள், உயிராக, ஆத்மாவே ஒளி தந்து கொண்டிருக்கிறது. அந்த ஆத்மா உறைந்திருக்கின்ற உடலினை, வேதாந்தம் இரண்டு வகையாகப் பார்க்கின்றது.

ஒருவகையில், மனித உடல் ஐந்துவிதமான கோர்வைகளால் போர்த்தப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது. அவை உணவுக் கோர்வை அல்லது உணவாலான போர்வை (அன்னமய கோசம்). அடுத்தது உயிர்க்காற்றாலான கோர்வை (பிராணமய கோசம்). மற்றவை மனக்கோர்வை (மனோமய கோசம்), அறிவுக் கோர்வை

(விஞ்ஞானமய கோசம்). ஆனந்தக்கோர்வை (ஆனந்தமய கோசம்) என்பன ஆகும்.

மற்றொருவகையிலே, வேதாந்தம் மனித உடலை மூன்று உடலாகக் காண்கின்றது.

முதலில் இருப்பது பூதவுடல் (ஸ்தூல சரீரம்). இது உணவுக்கோர்வை மட்டுமே. இதுவே கண்ணுக்குத் தெரிகின்ற, உடல். இரண்டாவது மெல்லுடல் (சூக்ஷ்ம சரீரம்). இது உயிர்க்காற்றாலன கோர்வை, மனக் கோர்வை மற்றும் அறிவுக் கோர்வைகளின் இணைப்பு. மூன்றாவது காரணவுடல் (காரண சரீரம்). இது ஆனந்தக் கோர்வை மட்டுமே.

உபநிடதங்கள் இவ்வறு ஐந்து கோர்வைகளாகவும், மூன்று உடல்களாகவும், உயிர்களின் உடலினை ஆய்ந்து, இக்கோர்வைகளுக்கு அப்பால், இந்த மூன்று உடல்களுக்கு அப்பால், ஆன்மா ஒளிவீசிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையைக் கூறுகின்றது. புலையன் இதனைச் சுட்டிக்காட்டவே, வெளிப்படையான பூதவுடலை முதலில் விளக்கிப் பிறகு இவற்றை எல்லாம் கடந்து ஒளி வீசிக்கொண்டிருக்கும் ஆத்ம ஒளியை விளக்கும் வகையாகத் தனது முதல் கேள்வியினைக் கேட்கின்றான்.

உடல் சடமானது. அதனால் அதற்குச் செயலறிவு ஏதும் கிடையாது. அப்படியானால், அவ்வுடலைத் தள்ளிப்போ எனச் சொல்லி என்ன பயன்? மற்றும் எல்லா உடல்களும் உணவாலாகியது என்பதால் அவைகளின் ஆதார காரணம் ஒன்றுதானே? மண்ணாலான பாண்டங்கள் பலவாகினும், மண் ஒன்றல்லவா?

'தேகம் அன்ன மய கோசம்' என்பது, தேகமாகிய தூல உடல்கள் எல்லாம், அன்னம் எனும் உணவால் ஆன மாற்றமே என்பதைக் குறிப்பது.

'மயம்' என்றால், ஒன்றிலிருந்து மாறுபாட்டுத் தோன்றுவது என்று பொருள். உணவு என்பது, எதனால் ஒன்று சமைக்கப்பட்டதோ அதனைக் குறிப்பது ஆகும். பஞ்சபூதங்கள் ஆகிய ஆகாயம், காற்று, தீ, நீர், மண் இவற்றின் கலப்பாலேயே அகிலத்தில் உள்ள எல்லாப் பொருட்களும் சமைக்கப்பட்டுள்ளது. இது விஞ்ஞானத்தாலும் நிரூபணமான உண்மை.

அந்த ஐந்து பூதப்பொருட்களாலேயே உணவாகிச் சமைக்கப்பட்ட உடல்கள், உலகில் பல வேறுபாடுகளுடன் இருந்தாலும், அவற்றின் வெளித் தோற்றத்தின் வேற்றுமையைக் கடந்தால், எல்லாச் சடப்பொருட்களின் மூலமும் இந்தப் பஞ்சபூதங்களாகவே ஆகிறது. ஆகையால் உடலை உடல் விலக்குவது என்பது வெறும் தோற்ற மாயம் அல்லவா?

ஒருவேளை, சடலமான உடல் அறிவற்றது என்பதைப் புரிந்து கொண்டதால், விலகிப்போ, விலகிப்போ எனச் சொன்னது, உள்ளிருக்கும் அறிவினைக் குறித்தா என்றால், அதுவும் தவறல்லவா? ஏனெனில் எல்லா உயிர்க்குள்ளும் உள்ள ஆத்மா என்றும் நிலைத்த, அறிவு மயமான, ஆனந்தம் (ஸத், சித், ஆனந்தம்) ஒன்றே

அல்லவா? அந்த ஆத்மா எல்லா இடத்திலும் நிறைந்துள்ளதல்லவா? அதனை விலக்குவது எப்படிச் சாத்தியம்?

வெளிவிவகாரத்தில் மயங்கி, வாழ்ந்தும் மடிந்தும் சுழலுகின்ற சாதாரண மனிதர்களுக்கு வேண்டுமானால், வெளிப்புறமான வேறுபாடுகளை மட்டுமே பார்க்கின்ற அறிவீனம் இருக்கலாம்! ஆன்ம தத்துவ விசாரணையில் ஈடுபட்டிருக்கும் ஞானிகளுக்கு, வேற்றுமையில் ஒற்றுமை காணும் பக்குவம் அல்லவா இருக்க வேண்டும்? அதனால்தான் புலையன், 'துறவர்களில் சிறந்தவரே' எனக் குறிப்பிட்டு அழைத்து, இத்தகைய வேறுபாட்டினைச் சாதாரண மனிதர்கள் வேண்டுமானால் காணலாம், எப்படி ஞானியானவர்கள் இப்படியான வெறுப்பைக் காட்டக் கூடும் எனக் கேட்கிறான்.

ஒருவேளை இந்த உண்மை தெரிந்திருந்தாலும், வெளி உடல் தூய்மையற்று இருப்பதால், உள்ளே இருக்கும் அறிவும் தூய்மை இழந்திருக்கும் என்ற ஐயம் வந்ததோ என எண்ணி, அடுத்த கேள்வியினைப் புலையன் கேட்கிறான்.

प्रत्यग्वस्तुनि निस्तरन्ग सहजानन्दावबोधाम्बुधौ विप्रो

अयम् श्वपचोयमित्यपि महान् को अयम् विभेद् भ्रमः?

ப்ரத்யக்$_3$வஸ்துனி நிஸ்தரன்க$_3$ ஸஹஜானந்தா$_3$வபோ$_3$தா$_4$ம்பு$_3$தௌ$_4$ விப்ரோ

அயம் ஶ்வபசோயமித்யபி மஹான் கோ அயம் விபே$_4$த$_3$ ப்$_4$ரம:?

திரையிலா நிறையாய்க் கடலாய் திவ்யபரி பூரண சுகமாய்

உரைவது உள்ளொளி ஆத்மா! உயிர்களுக் கெல்லாம் அகமாய்

முறையிதை முனியோய் அறிவீர்! மூண்டதோர் பேதத் தாலோ

மறையவன் ஒருவன், மற்றோன் மரித்தநாய்ப் புசிப்போன் என்றீர்?

பொருள்:

அலைகளற்ற ஆனந்தக் கடலாக நமக்குள் நெருக்கமாகத் தெளிவாக இருப்பதல்லவா ஆன்மா? அந்த ஞானம் அல்லவோ சரியான அறிவாகவும் புரிந்து கொண்ட பயனாகவும், ஞானவழியில் செல்பவருக்கு இருக்க வேண்டும்! (அவ்வாறு இல்லாமல்) எதனால் 'இவன் நாயைப் புசிக்கும் புலையன்' என்றும் 'இவன் அந்தணன்' என்றும் வெறுப்பால் வெளி வேறுபாட்டினை, வேறுபாடு இல்லாத பிரம்மத்திலே உம்மால் காணமுடியும்?

முதல் வரி:

ப்ரத்யக்$_3$ = தெளிவாக அருகில் உள்ள; வஸ்துனி = பொருள்; நிஸ்தரங்க$_3$ = அலைகள் அற்ற (அமைதியான); ஸஹஜ ஆனந்த$_3$ = இயற்கையிலேயே மாறாத ஆனந்தமான; போ$_3$த$_4$ = சரியான அறிவு, புரிந்து கொண்டமை; அம்பு$_3$தௌ$_4$ = கடலாகிய; விப்ரோ = (வாழ்வின் குறிக்கோளை ஆன்ம தத்துவத்தால் அறிய முயலும்) அந்தணனே;

இரண்டாம் வரி:

அயம் = இது (இவ்விடத்தில் இந்த வெறுப்பு); ஶ்வ பசோ = நாயைப் புசிப்பவன் (புலையன்); அயம் இதி அபி = என்றும், மற்றும்; மஹான் = உயர்ந்தவன் ; கோ அயம் = எதனால் இவ்விதமான; விபே$_4$த$_3$ ப்$_4$ரம: = வேறுபாடு ப்ரஹ்மத்தில் (காணமுடியும்?)

விளக்கம்:

முதல் கேள்வி, புலையன் ஒரு ஞானியே என நமக்கு அடையாளம் காட்டியது. இரண்டாம் கேள்வி அதனை நிச்சயப்படுத்துகின்றது.

இந்த இரண்டாம் பாடலின் முதல் வரியிலே, ஆத்மாவின் தன்மை என்ன என்பது விளக்கப்படுகிறது. எது எனக்கு மிக மிக அருகாமையில் இருக்கிறது? அது நானே அல்லவா? நானே எனக்கு மிகவும் நெருக்கமானவன். அந்த 'நான்' என்பது ஸத்-சித்-ஆனந்தம் எனும் நிலையான பொருளாய், முழுதான அறிவாய், முடிவில்லா ஆனந்தமாய் இருப்பது. அந்த 'நான்' யார் எனபதை அறிவதே ஆத்ம வித்யா எனும் தனையுணரும் அறிவு.

வேதாந்தம் இவ்வறிவின் முதல்படியாக, 'இது இல்லை, இது இல்லை' என்று கழித்துக் காட்டும் ஆய்வினை நமக்குக் கற்றுத் தருகிறது. 'நான் யார்' எனும் கேள்வியைக் கேட்டு, அதன் பதிலாக வரும் கருத்தினை ஆராய்ந்து, 'இது நான் இல்லை' எனத் தெளிந்து, மீண்டும் மீந்திருக்கும் பொருளில் 'நான் யார்' எனும் கேள்வியைக் கேட்டு, அதன் பதிலாக வரும் கருத்தினை ஆராய்ந்து...... இப்படி மூலத்தினை நோக்கி நாம் ஆய்வுப் பயணத்தினை அயராமல் மேற்கொண்டால், இனிமேல் ஆய்வதற்கு ஒன்றுமில்லை என்று ஓரிடத்தில், ஓருணர்வில், ஓரறிவில் நின்று விடுவோம். அந்நிலையே ஆத்ம தரிசனம்.

உதாரணமாக, 'நான் இந்த உடல் இல்லை, ஏனெனில் உடல் என்னுடையது என்பதால், நான் வேறு, என் உடல் வேறு என்று ஆகிறது. அதே போலவே என் மனமும், உலக அறிவும் நான் ஆக முடியாது'. இத்தகைய ஆராய்வில் அமர்வதே தியானம்.

இது எங்கே நம்மை அழைத்துச் செல்கிறது?

மனம் என்பது எண்ணங்களின் சங்கிலி. எண்ணங்களைக் கோர்ப்பது எது? அதை உணர வேண்டும் என்றால், மணிமாலையில், மணிகளை விலக்கி, அதனைக் கோர்த்திருக்கும் நூலினை அறிவது போல, ஒரு எண்ணம் முடிந்து, மற்றொரு எண்ணம் வருவதற்குள் கிடைக்கும் இடைவெளியினைப் பார்ப்பது அவசியம் ஆகும். அதுவே தியானம். அதனை உணர்த்துவதற்கே, தியானிப்பவர்கள் கையில்

மணிமாலையை உருட்டிக் கொண்டிருக்கும் கோலம். அதனை அறியாமல், தியானம் செய்யும்போது சொல்லும் மந்திரத்தின் கணக்கிற்காகவே மணிமாலை என்பது அறியாமை. மந்திரங்களின் கணக்கினைக் கண்காணித்துக் கொண்டிருந்தால், எப்படி உண்மையான தியானம் ஏற்படும்? நாம் எண்ணங்களின் மூலத்தை அல்லவா தேடிக் கொண்டிருக்கிறோம்!

புலையனின் வினா, முதல்வரியில் ஆத்மாவின் தன்மையைக் குறிப்பிடுகிறது. அதனாலேயே, புலையன் ஓர் ஆத்ம ஞானி என்பது தெரிகிறது. நமக்கு மிக அருகில் யார்? நாமே அல்லவா? அப்படி என்றால் அந்த ஆத்மா நாமே. அந்த ஆத்மா எப்படிப்பட்டது? ஆனந்தமயமான, எந்த விதமான அலைகளும் இல்லாத கடலைப்போல நிறைந்து இருக்கிறது.

புலையனின் கேள்வி அத்வைத ஞானத்தையும், அந்த ஞானத்தின் முடிவு என்பது அளவிலா, முடிவிலா ஆனந்தம் என்பதையும் காட்டுவதாக இருக்கிறது. ஆனந்தம் அல்லது முற்றிலும் நிறைவுற்று இருப்பது ஒன்றே, எல்லா உயிர்களின் குறிக்கோள். அவ்வானந்தம் என்ன என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததன் காரணத்தாலேயே, பலவிதமான முயற்சிகளால் ஒவ்வொரு உயிர்களும், உடல், மனம், மதி என்னும் உபகரணங்களைத் துணைக் கொண்டு, உலகில் செயலாற்றுகிறது. ஆனால் அந்தப் பரமானந்தம், என்றும் உள்ளதாக (ஸத்), அறிவு மயமாக (சித்) முழுமையான நிறைவாக (ஆனந்தம்) நமக்குள்ளேயே, ஆன்ம ரூபமாக விளங்குகிறது. அது ஒரு அலைகளற்ற ஆனந்தக்கடலாக , நமக்குள் பரிபூரணமாக, எல்லாவற்றையும் விட மிக மிக அருகில் இருக்கிறது. எனினும், அதனை உணராமல், திக்குத் தெரியாமல், எதனைத் தேடுகிறோம் எனப் புரியாமல், நாம் வெளியே தேடி அலைகின்றோம்.

ஆத்மா பரிபூர்ணமாக, தெளிவாக இருந்தாலும், அது இருக்கும் உடல்களின் அழுக்கினால் அந்த ஆத்மாவும் களங்கப்படுமோ என்ற ஐயம் வருவது சாதாரண மனிதர்களுக்கு வேண்டுமானால் வரலாம். அப்பரிபூரண ஆனந்த ரூபமான ஆத்மா, எந்த உடலில் பிரதிபலித்தாலும் அது ஒன்றே அல்லவா? ஞான மார்க்கத்தில் செல்பவர்களுக்கு இவ்வுண்மை தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? அப்படிப்பட்ட ஞானிக்கு இவன் புலையன், அவன் அந்தணன், இவன் மேலோன், அவன் கீழோன் என்றெல்லாம் எப்படி வேறுபாடு காண இயலும்?

அந்த ஐயத்தினை விலக்க, புலையன் அடுத்த கேள்வியையும் கேட்கின்றான்.

किम् गंगाम्बुधि बिंबितेम्बर मणौ चंडाल वीधी पयः

पूरेवा अन्तरमस्ति कांचनघटी मृत्कुम्भयोर्वांबरे?

கிம் க$_3$ங்கா$_3$ம்பு$_3$தி$_4$ பி$_3$ம்பி$_3$தேம்ப$_3$ர மணௌ சண்டா$_3$ல வீதீ$_4$ பய:

பூரேவா அந்தரமஸ்தி காஞ்சனக$_4$டீ ம்ரு’த்கும்ப$_4$யோர்வாம்ப$_3$ரே?

வானத்து மணியாம் பரிதி, வடிவத்தின் அழகாம் பிரதி

காணட்டும் கங்கை நந்நீர்! கரையுற்ற புலையன் வீதி

தேங்கிட்ட நீரில் வீழ்ந்தும் தெள்ளறி! என்ன பேதம்?

பாங்கறி! மண்ணோ, பொன்னோ பானைக்குள் வெளியோ பேதம்?

பொருள்:

வானத்தின் (ஒளி) மணியான சூரியன் ஒன்றே, (புனித) கங்கை நீரிலேயும், (அதே சமயம்), புலையன் வசிக்கின்ற தெருவிலே தேங்கியுள்ள (சாக்கடை) நீரிலும், பிரதிபலிக்கின்றது! தங்கக் குடத்துக்குள்ளும், மண்ணாலான குடத்துக்குள்ளும், ஒரே வெற்றிடம்தானே குடியிருக்கின்றது? அதனால் என்ன வேறுபாடு இவற்றில்? (சூரியன் ஒன்றே, ஆகாய வெளியும் ஒன்றே அல்லவா?)

முதல் வரி:

கிம் = என்ன?; க$_3$ங்க$_3$ அம்பு$_3$தி$_4$ = கங்கை நீரில்; பி$_3$ம்பி$_3$தே = பிரதிபலிக்கின்ற; அம்பர மணௌ = ஆகாயத்தின் மணியான (சூரியன்); சண்டா$_3$ல வீதீ$_4$ = புலையன் வசிக்கின்ற தெரு; பய: = நீர்;

இரண்டாம் வரி:

பூரே வா = தேக்கத்திலா; அன்தரம் = வேறுபாடு; அஸ்தி = உள்ளது; காஞ்சன க$_4$டே = தங்கக் குடத்திலே; ம்ரித் கும் ப$_4$ யோர் வா = களிமண் குடத்திலா; அம்பரே = ஆகாய வெளி;

விளக்கம்:

புலையனின் கேள்வி, எளிய எடுத்துக்காட்டுகளினால், ஆதாரமான அறிவுமயமான ஆத்மாவில் வேறுபாடு என்பது இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

முதல் எடுத்துக்காட்டு, சூரியினின் பிரதி புனித நீரில் விழுந்தாலும், அழுக்கான சாக்கடை நீரில் விழுந்தாலும், சூரியனில் எந்த பாதிப்பும் வேறுபாடும் இல்லை என்பதே. இதுவே முதல்வரியின் கருத்து.

இங்கே வானத்தின் ஆபரணமாகச் சூரியன் காட்டப்படுகிறான். அறிவாகிய பரந்த வானத்தின் ஒளி, ஆத்மா. ஆத்மா என்னும் அறிவுரூபம் (சைதன்யம்), அந்தச் சூரியனைப் போலவே எல்லா உடல்களிலும் பிராகசித்துக் கொண்டிருக்கிறது. ஆசைகளாலும் அதனால் ஏற்படும் வேற்றுமைகளாலும், மனமானது அலைகளால் கலங்கிய குட்டையாகி, அதனுள்ளே பிரதிபலிக்கின்ற ஆன்ம ரூபத்தை அடையாளம் காட்ட முடியாததாய் இருக்கிறது. இதனால் ஆன்மாவில் என்ன பேதம் ஏற்பட முடியும்!

முதல் எடுத்துக்காட்டில், பரமாத்மனே ஜீவாத்மாவாக எல்லா உடலிலும் இருக்கிறான் என்பதை சூரியனின் ஒளியே, எல்லா இடங்களிலும் இருப்பதாகக் காட்டியது.

இந்த இரண்டாவது எடுத்துக்காட்டு, ஜீவாத்மாவாகப் பல உடலிலும் வதிந்து இருக்கும் ஆத்மாவே, பரமாத்மனாக எங்கும் நிறைந்திருக்கிறது என்பதை, பானைகளுக்குள் அடைபட்ட பரவெளியாகக் காட்டுகிறது.

உடல்கள் எல்லாம் பஞ்ச பூத உணவாலான பானைகள். ஆத்மா, அப்பானைகளுக்குள் உயிர்த்திருக்கும் பரவெளி. எதைப் போல என்றால், மண்ணாலான பானைக்குள் அடைந்திருக்கின்ற ஆகாசமே, பொன்னாலான பானைக்குள்ளும் இருக்கிறது. இவற்றில் வேறுபாடுகள் இல்லை. பானைகள் உடைந்தால், பரவெளியில் இவை ஒன்றாயிருப்பதைப் புரிந்து கொள்வதில் என்ன கடினம் வரக்கூடும்? அதுபோலவே, உடல் பலவாக இருப்பினும், உள்ளே ஒளி விளக்காக, மாறாமல் இருக்கின்ற ஆன்மா ஒன்றே என்பதை ஏன் உணர முடியவில்லை?

இங்கே நாம் அறிய வேண்டிய பாடம் சமநோக்கம் அல்லது ஒற்றுமை காணும் உணர்வு. சமநோக்கு என்னும் மிக உயர்ந்த பண்புதான் அத்வைத ஞானத்தின் உச்சநிலை. அந்தச் சமநோக்கு இல்லாதபோது, அத்வைத ஞானம் எப்படிப் பரிபூரணமாகும் என்பதே புலையனின் வினாவில் விளைத்த வித்து.

ஆதி சங்கரரின் மனீஷா

புலையனின் வினாக்கள் ஜகத்குரு ஆச்சாரியாரின் ஆழ்ந்து நிச்சயித்த அறிவு விளக்கின் வெளிச்சத்தைத் தூண்டி நமக்கெல்லாம் ஞான ஒளி கொடுப்பதற்காக அமைந்தவையாக இருக்கின்றன. ஜகத்குரு ஆதிசங்கரர் அளித்த மனீஷா பஞ்சகம் எனும் இந்த ஐந்து மந்திரங்கள், புலையனின் கேள்விகளுக்கான விடையாக மட்டும் இல்லாமல், உபநிடதங்களின் சாரங்களை எல்லாம் வெளிக் கொணர்ந்த அரிய பொக்கிஷம்.

எல்லா அரிய விஷயத்தையும் சுருக்கி விளக்கும் ஆற்றல் ஆதி சங்கரர் பாடல்களிலே எப்போதும் விளங்கும். இங்கே ஐந்து பாடல்களின் முக்கியக் கரு என்னவென்றால், எதனை எல்லா உபநிடதங்களும் பலவிதமான வழியிலே விளக்குகின்றதோ, அதனை, சுருங்கக்கூறி விளங்க வைப்பதுதான். உபநிடதங்கள் அத்வைதப் பேருண்மையைப் பலவழிகளிலும் பழுதற விளக்கி, உணரவேண்டிய அரிய கருத்துக்களை விதைகளான வார்த்தைகளில் கோர்த்து, சிறிய ஆனால் மிகபெரிய ஞானத்தைத் தரக்கூடி வாக்கியங்களில் படைக்கிறது. அவை ஒவ்வொன்றும் '**மஹா வாக்கியம்**' என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக எவ்வாக்கியத்தின் கருத்தை அறிவதன் மூலம் நமக்குள் பெரிய மாற்றம் ஏற்படுகிறதோ அவ்வாக்கியமே நமக்கு மஹா வாக்கியம் என்று கொள்ளலாம். நமது உலக அனுபவத்தில் அத்தகைய, மாற்றங்களைத் தரவல்ல, வாக்கியங்களைப் பார்த்திருக்கிறோம்.

உதாரணமாக, 'வந்தே மாதரம்' எனும் வாக்கியம் சுதந்திர தாகம் கொண்டிருந்த இந்தியர்களுக்கு, விடுதலை வேட்கையைத் தூண்டிவிட்ட மஹா வாக்கியம் ஆகிறது. 'நீயே எந்தன் மகன்' என்ற குந்தியின் வாக்கியம், மஹாபாரதத்திலே, கர்ணனுக்குக் கிடைத்த மஹா வாக்கியம். அதனாலேயே கர்ணன் மனம் முழு நிறைவுற்றது. அவனது வாழ்க்கைப் பயணமும் மாறியது. 'கண்டேன் சீதையை' எனும் அனுமனின் வாக்கியம், ராமனுக்கு ராவணவதம் எனும் காரியத்தின் தொடக்க வித்து. 'ஸதாசிவா, உன் வாய் அடைக்காதா' என்று குரு சொன்ன வாக்கியத்தாலேயே, வாழ்நாள் முழுதும் மௌனமாய் இருந்தார் ஸதாசிவ பிரம்மேந்திரர் எனும் பிரம்ம ஞானி. 'இறப்பு என்பது உயிர் உடலைவிட்டுப் போவதுதான்' என்று கேட்ட காரணத்தாலேயே, 'நான் யார்' எனும் ஆன்ம ஆய்விலே கலந்து ஞானியானவர் பகவான் ரமண மஹரிஷி.

$E=MC^2$ எனும் சமன்பாட்டு வாக்கியமே விஞ்ஞான உலகில் பல விளைவினை விதைத்த மஹாவாக்கியம். இவ்வாறு ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு

சமுதாயத்துக்கும் உயர்வினைத் தரவல்ல வாக்கியங்கள் இருந்திருக்கின்றன.

உபநிடதங்களோ, மனிதர்கள் எல்லாருக்கும், எல்லாக் காலத்திலும் பொருந்துகின்ற உண்மையினைக் கூறுவன. அதனால், அவற்றில் உள்ள மஹா வாக்கியங்கள் என்றும் உண்மையாக, உலகில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் எப்போதும் பயன்படக்கூடிய வாக்கிய ஞானம். எளிமையான விதத்தில், மேன்மேலும் ஆய்வதற்கான வித்தான வார்த்தைக் கோப்புக்களால், எளிமைக்குள் மலையன்ன பெருமைகளைப் புதைத்து வைத்துள்ளதாய் அமைவனதான் இவ்வுபநிடத மஹா வாக்கியங்கள்.

அவற்றில் 'தத்வமஸி' (அது நீயே), 'அஹம் ப்ரஹ்மாஸி', (நானே பிரம்மமாய் இருக்கிறேன்), 'ப்ரக்ஞானம் ப்ரஹ்மா' (அறிவே பிரம்மம்), 'அயமாத்மா ப்ரஹ்மா' (ஆத்மனே பிரம்மம்) ஆன இவை நாலும், மிகவும் உன்னதமான மஹாவாக்கியங்களாகக் கருதப்படுகின்றன.

இவை என்ன சொல்கின்றன? நம்மை இறைவனாக உயர்த்திக் காட்டுகின்ற சமன்பாட்டுத் தத்துவங்கள் இவை. ஒவ்வொரு வாக்கியமும், ஒரு அரிதான சமன்பாட்டினைக் கொடுத்து, அதன்மூலம் உயிர்களுக்குள் விளங்கும் ஆத்மாவும், எல்லா அகிலங்களுக்கும் சாட்சியான பிரம்மமும் ஒன்றே என விளக்குகிறது.

பொதுவாக ' இதுவும் அதுவும் சமம்' என்று சொன்னால், நாம் அறிவது என்ன? முதலில் இது, அது என்று இரண்டு இருக்கின்றன, அவைகளுக்குள் வேறுபாடு இருப்பதுபோல் தோன்றுகிறது, ஆனால் உண்மையில் அவை இரண்டும் ஒன்று என்பதே அல்லவா? அப்படி என்றால், மஹா வாக்கியங்கள் காட்டும் உண்மை என்ன? ஜீவனில் இருக்கும் ஆத்மாவும், உலகெங்குமிருக்கும் பிரம்மமும் ஒன்று என்றால், இவ்விரண்டும் இருக்கிறது, இவற்றுக்குள் வேறுபாடு இருப்பனபோல் தோன்றுகிறது, ஆனால் ஆதார அறிவினால் இவை ஒன்று என்றாகிறது என்பதே! இந்த உண்மையினை ஆய்வதே உபநிடதங்கள். இந்த அரிய கருத்தை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற அறிவே மனீஷா பஞ்சகம்.

பொதுவாக அறிவினை அடைய நான்கு வழிகள் இருப்பதாகக் கூறுவர் மேலோர். அதிலும் முக்கியமாக ஆத்மனைப் பற்றிய அறிவினை அடைய முயல்வோருக்கு இவ்வழிகளின் தன்மையினை உணர்வது முக்கியம்.

முதலில் 'பிரத்தியக்ஷம்' எனப்படும் நமது ஐந்து புலன்களால் அறிதல். ஆனால், ஆத்மா ஐந்து புலன் அறிவினால் அறியப்பட முடியாததாக இருக்கிறது.

இரண்டாவது 'அனுமானம்' எனப்படும் அறிவாலான ஆய்வு. அறிவு, ஒன்றைப் பகுத்தறியவும், தொகுத்துணரவும் வழிசெய்கின்றது. ஆனால், ஆராய்வதற்கும், ஒரு அடிப்படைக் கருத்து வேண்டும் அல்லவா? அக்கருத்து எங்கிருந்து கிடைக்கிறது? எல்லா ஆராய்ச்சிக்கும் முன்பே அறியப்பட்ட அல்லது அறிந்ததாகக் கருதப்பட்ட ஒரு பொருள் முதலில் கிடைக்க வேண்டும் அல்லவா?

அக்கருத்தைத் தருகின்ற அதிகாரி யார்?

இதனைத் தருவது 'ஆகமம்' அல்லது வேதங்களின் அறிவு. இதுவே மூன்றாவது வழி. இதுவே அடிப்படை அறிவு. வேதாந்த உபநிடதங்களே, ஆன்ம ஆய்வு என்பதால், உபநிடதங்களின் கருத்துக்களே, மிகவும் முக்கியமான ஆதார அறிவாக மேற்கொள்ளப்படுகின்றது.

ஏன் உபநிடதங்களை மட்டுமே ஆன்ம அறிவின் ஆதாரமாக ஏற்க வேண்டும் என்றால், அதில் உள்ள உண்மைகள், முன்பு இந்த ஆய்வினை மேற்கொண்டு, முற்றிலும் உணர்ந்த ஞானிகளின் அறிவு என்பதாலேயே ஆகும். எனவே அவற்றில் நமக்கு நிபந்தனைகள் ஏதுமில்லாத நம்பிக்கை இருப்பது, ஆன்ம அறிவுக்கு மிக மிக அவசியம். அவற்றில் நம்பிக்கை இல்லை என்றால், நமக்கு நம்மை ஆராய்வதற்கு வேறு வழியே இல்லை! எனவே அத்தகைய நம்பிக்கை நமக்கு வரும் காலம் வரை, நாம் ஆன்ம தத்துவத்தை ஆராய்கின்ற பயிற்சியினைத் தள்ளிப்போடவேண்டியதுதான்.

நான்காவதும் முடிவானதுமான வழி, 'ஸ்வானுபவம்' எனும் சுய அனுபவம். இது ஒன்றே அறிவின் முழு உறுதி. ஆத்மனைத் தன்னுள்ளே முழுதும், தானாகவே அனுபவிக்கின்ற அந்த வழியே உறுதியும், இறுதியுமான வழி. இந்த சுய அனுபவத்தினைப் பெற்ற ஞானிகளின் அறிவே, ஆகமம் எனக் காட்டப்பட்ட உபநிடத உண்மைகளாக, மூன்றாவது வழியாகக் கூறப்பட்டது.

சுய அனுபவம் எனும் தன்னுள்ளே ஆத்மாவினைத் தரிசிக்கின்ற அனுபவம், உபநிடத உண்மைகளில் உறுதியாய் இருந்து, அனுமானம் எனும் இடைவிடா ஆய்வினால் தெளிந்து, ஒர் நாள், ஒரு கணத்தில், 'சட்டென' விலகிய திரையாக நமது குழப்பங்கள் மறைந்து, நமக்குள்ளே பிராகசிக்கின்ற ஆனந்தமே ஆகும். எல்லா வழிகளிலும், தொடர்ந்து பலகாலமும், பல பிறவிகளிலும் எடுத்துக் கொண்ட பயிற்சியே, ஒரு நொடியில் நம்மை நமை அறியும் ஞானியாக உயர்த்துகின்றது. அதனாலேயே, முயலாமலேயே சிலர் இப்பிறவியில் ஆன்ம ஞானியராய் மலர்வதும், பலர் முயற்சிகள் செய்தும், முதிராமலே மறைவதுமாகத் தொடர்கிறது.

புலையனின் கேள்வி, சமுதாயப் பிரச்சனையாக இருந்த தீண்டாமையினால் எழுப்பட்டதாக இருக்கலாம். ஆனால், அதன் ஆழம், ஆத்ம ஞானத்தைப் பற்றியது. அதனாலேயே, ஆதி சங்கரர், இந்த ஐந்து பாடல்களிலேயே, வேத உபநிடத சாரங்களை, அறிவுபூர்வமாக ஆராய்ந்து பெறக்கூடிய உண்மைகளாகப் படைத்துள்ளார்.

மனீஷா பஞ்சகத்தின் முதல் ஸ்லோகம் ஜீவனைப் பற்றிய ஆய்வு செய்து, அந்த ஆய்வின் முடிவில், ஜீவனே பிரம்மம் என நிச்சயிக்கிறது. இரண்டாவது ஸ்லோகம் பிரம்மத்தைப் பற்றிய ஆய்வு செய்து, அதன் முடிவில், பிரம்மமே ஆத்மாவாக எல்லா ஜீவனிலும் இருக்கிறது என நிச்சயிக்கிறது. எனவே முதல் இரண்டு

ஸ்லோகங்களே எல்லா உபநிடதத்தின் மூலக் கருத்துக்களையும் சாரப் பிழிந்து கொடுத்து விடுகின்றன. 'ஜீவ-பிரஹ்ம ஐக்கியம்' அனும் அத்வைத உண்மை கிடைத்து விடுகிறது.

கருணை வடிவான ஆதி சங்கரர், அத்தகைய ஞானம் மனிதர்கள் எல்லாருக்கும் பயன்படவேண்டும் என்பதற்காகவே, மூன்றாவது ஸ்லோகத்தில் உயரிய அத்வைத ஞானத்தை அடைவதற்கு, எத்தகைய வழிகளை நாம் பின்பற்ற வேண்டும், ஏன் பின்பற்ற வேண்டும், அப்படிச் செய்தால், நமக்கு என்ன பயன் கிடைக்கும் என்பதை விளக்குகின்றார்.

பிறகு நான்காம் ஸ்லோகத்தில், எப்போதும் இருப்பதான (ஸத்) ஆத்மா, முழுமையான அறிவு (சித்) வடிவாக இருப்பதை விளக்குகிறார். அதனை நாம் புற அறிவினால் அறிய முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? இதனையே இந்த நாலாவது ஸ்லோகம் விளக்குகின்றது.

இறுதியாக, ஐந்தாம் ஸ்லோகத்தில், இந்த ஞானத்தின் பலன் ஆத்மனை சுகவடிவாக (ஆனந்தம்) அடைவதே எனக் காட்டி, இத்தகைய உயரிய ஞானத்தைக் கொண்டு அதிலேயே நிலைத்திருப்பவன், புலையனோ, அந்தணனோ - எவராய் இருப்பினும், அவரே இந்திரன் முதலான தேவர்களும் வணங்கத்தக்க பாதங்களைக் கொண்டவர் எனத் தமது நிச்சயித்த திடமான முடிவினை அறிவிக்கின்றார்.

இப்பாடல்களே அத்வைத விளக்கு! அத்வைத விளக்கத்தின் வித்து. பயிலப் பயில, மாபெரும் உண்மையினை நோக்கிப் படிப்படியாக நம்மை அழைத்துச் செல்லும் ஆசான். இதன் ஆழ்ந்த கருத்துக்கள் தக்க குருவிடம் கேட்டு அறியப்பட வேண்டியவை. எனவே சூரியனுக்கு ஊதுபத்தியால் வெளிச்சம் காட்டுவது போலத்தான், மனீஷா பஞ்சகம் எனும் ஞானப்புதையலுக்கு எழுதப்பட்ட இந்த எளிய உரை. இது, படிப்போரை மேலும் பயில்வதற்குத் துடிப்போராக மாற்றினால், அதுவே இப்பணிக்குப் பரிசு!

முதல் ஸ்லோகம்

जाग्रत्स्वप्न सुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते

या ब्रह्मादि पिपीलिकान्त तनुषु प्रोता जगत्साक्षिणी,

सैवाहं न च दृश्य वस्त्विति दृढ प्रज्ञापि यस्यास्तिचे

च्चण्डालोस्तु स तु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मम || 1||

ஜாக்$_3$ரத்ஸ்வப்ன ஸுஷுப்திஷு ஸ்பு$_2$டதரா யா ஸம்'விது$_3$ஜ்ஜ்ரு'ம்ப$_4$தே

யா ப்$_3$ரஹ்மாதி$_3$ பிபீலிகாந்த தனுஷு ப்ரோதா ஜக$_3$த்ஸாக்ஷிணீ,

ஸைவாஹம்' ந ச த்$_3$ரு'ஶ்ய வஸ்த்விதி த்$_3$ரு'ட$_4$ ப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்திசே

ச்சண்டா$_3$லோஸ்து ஸ து த்$_3$விஜோஸ்து கு$_3$ருரித்யேஷா மனீஷா மம || 1||

சுயமாகி விழியுலகில் கனவில் ஆள்துயிலில்

சுடராகித் தெளிகின்ற ஸ்வரூபம் எதுஅதுவே

அயனாதி எறும்பாகி ஆனபல உயிர்க்குள்

அறிவாகிக் கோர்த்திட்ட அகிலத்தின் சாட்சி!

வயமாகும் அதுஇதுவே வகுத்துணர முடியா

வடிவாகும் எனும்நீதி வழுவாத ஞான

மயமானோர் புலையோனோ மறையோனோ என்ன

மனமார குருஅவரென் திடமான முடிவு (1)

பொருள்:

விழிப்பு நிலை, கனவு, உறக்கம் எனும் (மூன்று வேறுபட்ட அனுபவங்களின்) நிலைகளில் எல்லாம் உள்ளே பதிந்து, அறிவாகிய ஒளியைத் தந்து கொண்டிருப்பது எதுவோ (ஆத்மனே), பிரம்ம தேவன் முதலாக எறும்பு போன்ற சீவராசிகள் அனைத்துக்குள்ளும் ஊடுருவிக் கோர்த்து இருக்கின்றது எதுவோ (பரமாத்மா), இது (ஆத்மா) அதுவே (பரமாத்மா) ஆகும். எனினும், புறஅறிவினால் புலப்படாது, அப்படியே (எப்போதும்) அது இருக்கிறது. இந்த ஞானத்தை எவர் புரிந்து அதில் நிலைத்தவராய் உள்ளாரோ அவரே, (வெளித்தோற்றத்தில்) புலையனாக இருந்தாலும், இருபிறப்பேற்ற அந்தணராக இருந்தாலும் என்னுடைய குரு என்பது என்னால் நிச்சயிக்கப்பட்ட அறிவு (முடிவு).

முதல் வரி:

ஜாக்$_3$ரத் = (தூல உடலோடியங்கும்) விழிப்பில்; ஸ்வப்ன = (தூல உலகறியா) கனவில்; ஸுஷுப்திஷு = (ஒன்றும் அறியாத) உறக்கத்தில்; ஸ்பு$_2$ட தரா = மிகத் தெளிவாக; யா ஸம்வித்$_3$ = எது முற்றிலும் அறிகிறதோ; ஜ்ரும்ப$_4$தே = எல்லாவற்றிலும் விளங்கிக் கொண்டிருக்கின்றதோ;

இரண்டாம் வரி:

யா ப்$_3$ரஹ்மாதி$_3$ = எது பிரம்ம தேவன் முதலான; பிபீலிகா அந்த = எறும்பு வரையிலான (அதற்கும் கீழான); தனுஷு = எல்லா உடல்களிலும்; ப்ரோதா = உள்ளே கோர்த்திலங்கும்; ஜகத்$_3$ சாக்ஷிணீ = உலகத்தின் (எலாச் செயல்களுக்கும்) சாட்சியாக (உள்ளதோ);

மூன்றாம் வரி:

ஸ ஏவா அஹம் = அதுவே நான் (என்ற); ந ச த்ருஷ்ய வஸ்த்து இதி = நம்மால் அறிந்து கொள்ள முடியாத பொருளான இது; த்$_3$ருʼட$_4$ ப்ரக்ஞாபி யஸ்யா = புற அறிவுக்கு அப்பாற்பட்டு; அஸ்தி சேதே = அவ்வாறே இருக்கிறது என்பதை அறிபவன்;

நான்காம் வரி:

சண்டா$_3$லோஸ்து = புலையானாலும் ; ஸ து$_3$ = அதே போல; த்$_3$விஜோஸ்து = இருபிறப்பேற்றவனானாலும்; கு$_3$ருர் இதி யேஷா = இந்த ஞானத்தை நிரந்தரமாக உடையவரே குரு என்பது; மனீஷா மம = என்னுடைய தீர்மானமான அறிவு.

விளக்கம்:

இந்த முதல் ஸ்லோகம் ஜீவனைப் பற்றிய ஆய்வினை முதல் வரியிலே காட்டுகின்றது. ஜீவனை ஆய்வதற்கு, மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களையே பொருளாக எடுத்துக் காட்டுகிறது. மனித உடல், முறையே பூதவுடல், மெல்லுடல், காரணவுடல் என மூன்று உடல்களாகவும், இவை அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய மற்றும் ஆனந்தமய கோசங்கள் எனும் ஐந்து கோர்வைகளால் ஆனதாகவும் முன்பே உணர்த்தப்பட்டது. இப்பாடல், ஜீவனது இந்த மூன்று உடல்களுக்கும் ஏற்படும் மூன்றுவித அனுபங்களை ஆராய்கிறது.

எல்லா மனித உயிர்களும் தினமும் மாறி மாறி அனுபவிக்கும் மூன்று நிலைகளை உபநிடதங்கள் 'அவஸ்தா' என்று குறிக்கின்றது.

ஒன்று 'ஜாக்ரத்' எனும் உடலும், மனமும் பூதவுலகியலில் ஈடுபடுகின்ற விழிப்பு நிலை. இதைத்தான் நாம் தினசரி நடத்தும் உலக வாழ்க்கையாகக் கருதுகின்றோம். ஆனால் உபநிடதங்கள் இந்த விழிப்புநிலை, ஜீவனுக்கு மூன்றில் ஒரு பங்கான அவஸ்தை என்றே கருதுகிறது.

மற்றொரு அனுபவம் கனவு எனப்படும் 'ஸ்வப்ன அவஸ்தை'. இந்தக் கனவு அனுபவத்தில் தூல உடலோ, பூதவுலகியலோ தொடர்பில் இல்லை. மனம் மட்டுமே சிந்தையில் பதிந்த நினைவுகளேயே உணவாகச் சமைத்து, இந்தக் கனவுலகைப் படைத்து, அனுபவிக்கிறது.

மூன்றாவது அனுபவம் ஆழ்துயில் அல்லது உறக்கம். இந்த 'ஷுஷுப்தி' எனும் அவஸ்தையில், நமது உடல், மனம் இரண்டும் அறியாமை எனும் போர்வைக்குள் ஆழ்ந்துவிடுகிறது; ஒன்றும் தெரியாத அனுபவத்தை மட்டுமே ஜீவன் பெறுகிறது.

நாம் தினசரி இந்த மூன்று அனுபவங்களைப் பொதுவாக அனுபவித்துக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கை. உபநிடதங்கள், இம்மூன்று அனுபவங்களையும் ஆராய்கிறது.

அனுபவங்களை ஆய்வதினாலேயே, அந்த அனுபங்களுடைய ஆதார அறிவினைப் பெற முடியும். அனுபவத்தால் புரிந்து கொள்ளும் அறிவு ஒன்று; அனுபவத்தை ஆராய்வதால் வரும் அறிவு அதைவிட ஆழமான ஒன்று. உண்மை என்று அனுபவத்திக் கொண்டிருக்கின்ற ஒரு அறிவு, சரியான ஆய்வுக்குப் பிறகு வேறொரு உண்மையைக் காட்டுகிறது. உதாரணமாக சூரியனின் உதயத்தை அனுபவித்து, அதனால் சூரியன் கிழக்கில் உதிக்கிறது என்ற அறிவு ஒரு உண்மை. அதனை ஆராய்ந்து பார்த்தால், சூரியன் உதிப்பதோ, மறைவதோ இல்லை, அதன் கிழக்கின் உதயம் பூமியின் சுழற்சியால் வரும் விளைவு என்பது தெளிந்த அறிவு. அனுபவம் இன்னும் முன்போலவே இருப்பினும், ஆதார அறிவு வேறாக இருக்கிறது.

மனிதர்கள் தினமும் அடையும் இந்த மூன்று அனுபவங்களை நாம் ஆராய்வதன் நோக்கம் என்ன? இந்த மூன்று அனுபவங்களிலும் எது பொதுவாக இருக்கிறது? எது வேறுபட்டது? இதனை ஆராய்ந்தால் நமக்குக் கிடைக்கும் முதல் பாடம் - ஒரு நிலையில் அனுபவிக்கும் உலகமோ, உடலோ, பொருளோ, மறு நிலையில் இருப்பதில்லை என்பதுதான். கனவுலகின் விருந்து, விழிப்புலகின் பசிக்கு உதவாது. விழிப்புலகின் தூல உடலின் பங்கு, கனவுலகில் இருக்காது. உறக்கத்திலோ எதுவும் இல்லை. அப்படி என்றால், இந்த ஒவ்வொரு அனுபவங்களிலும், உடலோ, மனமோ, உலகோ - இவைகள் எல்லாம் மாறிக் கொண்டே இருக்கின்றன. நிலையானவையாக இல்லை!

இந்த மூன்று அனுபவங்களிலும், எது மாறாமல் இருக்கிறது?

அனுபவம் என்பதற்கு, அனுபவிக்கும் பொருள், அனுபவிப்பவன், அனுபவிக்கும் அறிவு என மூன்றும் இருப்பது அவசியமாகிறது. அனுபவிக்கும் பொருள் மூன்று நிலைகளிலும் மாறு படுகிறது என அறிந்தோம். அறிவுதான் அனுபவத்துக்கு அடிப்படை. முதல் வரியில் 'ஸ்ம்வித்' எனக் குறிப்பிட்ட இந்த அறிவே ஜீவனின் மூன்று அனுபவ நிலைகளிலும், தொடர்ந்து இருக்கின்றது. அந்த அறிவே, பிறகு, 'நான் உலக விஷயங்களில் ஈடுபட்டேன்', அல்லது 'நான் கனவில் இதனைக் கண்டேன்', அல்லது 'நான் நன்றாகத் தூங்கினேன்' என்றெல்லாம் அறிவிக்கின்றது. ஆதலால் அனுபவிப்பவன் அறிவுமயமாகவே இருக்கிறான் என்றும் அந்த அறிவுமயமே 'நான்' என்றும் புரிகிறது.

இந்த ஆய்வில் நாம் தெளியும் முக்கிய உண்மைகள் என்ன?

முதலில் ‘நான்’ என்பவன் உடல்/மனம்/உலகம் இவற்றிலிருந்து வேறுபட்டவன். இரண்டாவது, அந்த 'நான்' என்பது அறிவுமயமானதாக இருக்கின்றது. மூன்றாவதாக, அந்த 'நான்' ஜீவனுடைய மூன்று அனுபவ உலகங்களிலும் மாறாது, தொடர்ந்து இருப்பவன். இறுதியாக, மனித வாழ்க்கை என்பது இந்த மூன்றுவிதமான தினசரி அனுபவ நிலைகளின் மொத்தமே என்பதால், அந்த 'நான்', என்பவன் ஜீவனுடைய பயணத்தில் என்றுமே மாறாதவனாக இருக்கின்றான். இந்த உண்மைகளே, ஜீவனை ஆராய்வதால் கிடைத்த பலனாக முதல் ஸ்லோகத்தின் முதல் வரியிலேயே, பகவான் ஆதி சங்கரர் காட்டும் உபநிடத ஞானம்.

இரண்டாவது வரியில், அந்த 'நான்' என்று உணரும், தன்னுள்ளே இருக்கும் அறிவுமயமான சக்தியே, உலகில் உள்ள எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்க வேண்டும் என்ற ஆய்வினைத் தருகிறது. உலகங்களைப் படைத்ததாகக் கருதப்படும் பிரம்ம தேவன் முதல், சிற்றெறும்பு வரையிலான, அதாவது எல்லா உயிர்களுக்குள்ளும் இதே அறிவு கோர்க்கப்பட்டு உலக சாட்சியாக இருக்கிறது. இதனையே மீண்டும் அடுத்த ஸ்லோகம் ஈஸ்வர ஆராய்ச்சியாகக் காட்டுகின்றது. முதல் வரியில் தெளிந்த எனக்குள் இருக்கும் 'நான்' எனும் அறிவும், இரண்டாம் வரியில் தெளிந்த எல்லா உயிர்க்குள்ளும் 'நான்' என இருக்கும் அறிவும் ஒன்றே.

இதனை மூன்றாம் வரியில் 'ஸ ஏவா அஹம்' (அதுவே இது) என்னும் மஹா வாக்யமாக, ஜீவனே ஈஸ்வரன் அல்லது ஆத்மாவே பரமாத்மா என்று அறிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு உடலிலும் உயிர்த்துக் கொண்டிருக்கும் ஜீவாத்மாவும், எல்லா உடலிலும் கோர்த்துக்கொண்டு, சாட்சியாக விளங்கும் பரமாத்மாவும் ஒன்றே. அந்தப் பரமாத்மனை 'ஈஸ்வரன்' என்று உபநிடதங்கள் அழைக்கின்றன. எனவே 'ஸ ஏவா அஹம்' எனும் வாக்கியத்தினால், ஜீவனையும், ஈஸ்வரனையும் அறிமுகப்படுத்தி, ஐக்கியப்படுத்துகின்ற மஹா வாக்கிய விளக்கத்தினை ஜகத்குரு ஆதி சங்கரர், நிரூபணம் செய்கின்றார்.இதுவே சத்தியம்.

ஆனால் நம்மால் ஏன், நமக்குள்ளே இருப்பதான இந்த 'நான்' எனும் ஆத்மாவினை அறிய முடியவில்லை? இதனையே மூன்றாம் வரி தொடர்ந்து விளக்குகிறது. 'நான்' என்பது அறியப்பட முடியாதது. எதை நாம் அறிகிறோமோ, அதிலிருந்து நாம் வேறுபட்டு இருக்கிறோம், ஏனெனில் ஒன்று அறியப்பட்டால், அறிபொருள், அறிந்தவன் என இரண்டாகிறது அல்லவா? அதனாலேயே, இந்த நான் எனும் ஆத்மா, புற அறிவினால் அறியப்படமுடியாதாது.

இறுதி வரியிலே புலையனது கேள்வியால் தெளிந்த தனது உறுதி எது என்பதைக் காட்டுகின்றார். அதாவது, மேற்கூறிய ஞானத்தைத் திடமாகக் கொண்டவர், புலையனாகவோ, அந்தணராகவோ எவராக இருந்தாலும் அவரே என்னுடைய குரு என்பதே என்னுடைய நிச்சயித்த அறிவு என்று இறுதி வரியிலே முடிவாகத் தருகின்றார்.

இவ்வாறு முதல் ஸ்லோகத்தில் ஜீவ ஆய்வு செய்து மஹாவாக்கிய உண்மையை உறுதிசெய்த ஜகத்குரு சங்கரர், அடுத்த ஸ்லோகத்தில், ஈஸ்வர ஆய்வு செய்து, இதே மஹாவாக்கியத்தை மீண்டும் நிலை நிறுத்துகிறார்.

இரண்டாம் ஸ்லோகம்

ब्रह्मैवाहमिदं जगच्च सकलं चिन्मात्रविस्तारितं

सर्वं चैतदविद्यया त्रिगुणयाशेषं मया कल्पितम्

इत्थं यस्य दृढा मतिः सुखतरे नित्ये परे निर्मले

चण्डालोस्तु स तु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मम || 2 ||

ப்$_3$ரஹ்மைவாஹமித$_3$ம்' ஜக$_3$ச்ச ஸகலம்' சின்மாத்ரவிஸ்தாரிதம்'

ஸர்வம்' சைதத$_3$வித்$_3$யயா த்ரிகு$_3$ணயாஶேஷம்' மயா கல்பிதம்

இத்த$_2$ம்' யஸ்ய த்$_3$ரு'டா$_4$ மதி: ஸுக$_2$தரே நித்யே பரே நிர்மலே

சண்டா$_3$லோஸ்து ஸ து த்$_3$விஜோஸ்து கு$_3$ருரித்யேஷா மனீஷா மம || 2 ||

அகண்டபர பிரம்மசுகம் அண்டங்கட் கெல்லாம்

அறிவுமய வித்தாகும் ஆதார சாட்சி!

பரந்தபுறம் விரிமாயை படுமூன்று குணத்தால்

பர்வையிலே ஏற்றிவைத்த பலவான காட்சி!

கரந்தறிவு நிரந்தரமாய்க் களங்கமிலாப் பிரம்மம்

கலந்துணர எப்போதும் கண்டசுக ஞான

மயமானோர் புலையோனோ மறையோனோ என்ன

மனமார குருஅவரென் திடமான முடிவு (2)

பொருள்:

நானே பிரம்மமாக இருக்கிறேன். எல்லா உலகங்களும், நானாகிய துல்லிய அறிவினால் மட்டுமே விரிக்கப்பட்டது. இந்த உலகங்களெல்லாமும், அதனைப் படைத்தவன் என்னும் பதவியும், அவித்தை எனும் முக்குணங்களடக்கிய மாயையினால், 'கல்பிதமாக' ஏற்றி வைக்கப்பட்டுள்ளன. (அதாவது படைத்தவுனும் அன்றி, படைத்த உலகமுமாயும் அன்றி), நான் துல்லிய அறிவாக மட்டுமே இருக்கின்றேன். இத்தகைய எப்போதும் நிலைத்த, முழுதும் ஆனந்த மயமான, உயர்ந்த, தூயமான பிரம்மத்தில் திடமான அறிவுடையவராக இருக்கிறாரோ, அவரே, (வெளித்தோற்றத்தில்) புலையனாக இருந்தாலும், இருபிறப்பேற்ற அந்தணராக இருந்தாலும் என்னுடைய குரு என்பது என்னால் நிச்சயிக்கப்பட்ட அறிவு (முடிவு).

முதல் வரி:

ப்ரஹ்ம ஏவ அகம் = நான் பிரம்மமாகவே இருக்கிறேன்; இதம் ஜக$_3$த் ச சகலம் = இந்த உலகம் எல்லாமும்; சிந்மாத்ர = துல்லிய அறிவினால் மட்டுமே; விஸ்தாரிதம் = விவரித்துக் கொண்டது;

இரண்டாம் வரி:

ஸர்வம் ஸ ஏத$_3$த் = இந்த எல்லாச் சடவுலகும்; அவித்$_3$ய யா = அவித்தை எனும் மாயையின்; த்ரிகு$_3$ணயாய = மூன்று குணங்களினால்; ஷேஷம் = (படைத்தவனும், படைப்புமாக) எஞ்சியுள்ளது; மய கல்பிதம் = ஏற்றி வைக்கப்பட்டுள்ளன;

மூன்றாம் வரி:

இத்த$_2$ம் = இவ்வாறு (புரிந்து கொண்டு); யஸ்ய = எவருக்கு; த்$_3$ருடா$_4$ மதி: = திடமான அறிவு; சுக தரே = அளவிலா ஆனந்தமயமான; நித்யே = எப்பொழுதுமுள்ள ; பரே = மேலான; நிர்மலே = தூயமான;

நான்காம் வரி:

சண்டா$_3$லோஸ்து = புலையானக இருந்தாலும் ; ஸ து$_3$ = அதே போல; த்$_3$விஜ அஸ்து = இருமுறைப் பிறந்தோனாக (அந்தணன்) இருந்தாலும்; யேஷா = எவர் இக்குணமுடையவரோ அவரே; குருர் இதி = இவரே குரு; மனீஷா ம ம = என்னுடைய நிச்சயித்த அறிவு (முடிவு).

விளக்கம்:

முதல் பாடலில் ஆத்மாவே ஜீவாத்மன் என்பதாக ஓர் உடலுக்குள் உயிர்ப்பித்துக் கொண்டுடிருப்பது என்பதையும், பரமாத்மனாக, எல்லா உடலுக்குள்ளும் கோர்த்துக்கொண்டு, எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு, சாட்சியாக இருக்கிறது என்பதையும் அறிந்து கொண்டோம்.

முதல் ஸ்லோகத்தில் ஜீவனைப் பற்றிய, அதாவது நம்மைப் பற்றிய ஆராய்ச்சிக்கு, நமது மூன்று அனுபங்களையே கருவாக எடுத்துக்கொண்டது போல, உலகைப் படைத்தவன் இறைவன் என்ற கோட்பாட்டின்படி, இறைவனை ஆய்வதற்கு, உலகத்தையே கருவாக, எடுத்துக் கொள்வது தக்கதே. அதனாலேயே ஆதி சங்கரர் இந்த இரண்டாம் ஸ்லோகத்தில், ஈஸ்வரன் (பிரம்மம்) யாதென விளக்க, ஈஸ்வரனால் படைக்கப்பட்டதாகக் கருதப்படும் உலகினையே ஆராய்ந்து, அதன் முடிவில் அந்த ஈஸ்வரனே ஜீவன் என்று மஹாவாக்கியத்தை நிருபிக்கின்றார்.

ஈஸ்வரனே உலகைப் படைத்தவன் எனும் கோட்பாட்டின் காரணம் என்ன? இது எப்படி சரியாகும்?

இதற்கு காரண-காரிய ஆய்வே அடிப்படை. எல்லா விளைவுக்கும் ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், எல்லாப் படைப்புக்கும் ஈஸ்வரன் காரணம் என்பது இங்கே காட்டப்படுகின்றது. இது ஒரு 'நிமித்த காரணம்' அல்லது இடப்பட்ட காரணம் (assinged-cause). இவ்வழக்கம் உலகில் உள்ள எல்லா சமயங்களும் ஏற்றுக்கொண்டது ஆகும். வெவ்வேறு பெயரில் அழைக்கப்பட்டாலும், நிமித்த காரணமாக, ஒருவனை எல்லாப் படைப்புக்களுக்கும் காரணமாகக் காட்டப்படுவது வழக்கம். அறிவியலும் இதற்கு விதி விலக்கு அல்ல. 'எல்லாப் பொருள் விளக்கம்' (Theory of Everything) எனும் அறிவியல் ஆய்வும், நிமித்த காரணமாக, ஓர்-நிலைப்புள்ளியை (point of singularity) காலத்தின் ஆரத்தில் (at the orgin of time) நியமிக்கிறது.

உபநிடதங்களோ இவற்றுக்கும் மேலாக ஆராய்கின்றது.

ஈஸ்வரன் அல்லது பரமாத்மனே எல்லாப் படைப்புக்கு நிமித்த காரணம் என்றால், அப்படைப்புக்கான அறிவும், பொருளும் யார் கொடுத்தது? இந்த ஐயத்தினை அத்வைதம் 'மாயா தத்துவம்' எனும் ஒரு பேரறிய கோட்பாட்டினால் விளக்குகின்றது.

ஆத்மா முழுமையான அறிவு வடிவானது என்பது இங்கே முதல் பாடலில் காட்டப்பட்டது. எனவே பரமாத்மனாகிய ஈஸ்வரன் முழுமையான அறிவு வடிவே என்பதனால், உலகங்களைப் படைக்க, வேறு அறிவினைப் பெற வேண்டியதில்லை என்பதாகிறது. இரண்டாவதாக, உலகங்களைப் படைப்பதற்கான பொருளும், பலவிதமாய்ப் படைக்கின்ற நோக்கமும் அதன் விளைவான செயலும், ஈஸ்வரனது 'மாயை' எனும் சக்தியினாலேயயே நடக்கிறது.

இந்த மாயை என்பது என்ன?

பிரம்மத்தில் அடங்கி இருக்கும் அளப்பறிய சக்தி (potential and unmanifest) 'மூலப்பிரகிருதி' என வேதங்களில் அழைக்கப்படுகின்றது. இதுவே முடிவில்லாத சக்தி. அச்சக்தி, பிரம்மத்திலிருந்து வெளிப்படும்போது, 'மாயை' என்று பெயரில் விளங்குகின்றது. பிரம்மத்திலிருந்து மாயையின் வெளிப்பாட்டைக் குறிக்கையில், மாயையுடன் விளங்கும் ஈஸ்வரனாக பிரம்மம் காட்டப்படுகின்றது. அதாவது, மாயை என்று சொல்லும்போது, அங்கே ஈஸ்வரன் இருக்கின்றார். மாயை இல்லாதபோது, அதாவது மாயை முற்றிலும் வெளிப்படாதபோது, பிரம்மம் மட்டுமே இருக்கிறது.

'யா மா சா மாய' அதாவது எது உண்மையில் இல்லையோ அது மாயை என்று சொல்கிறது வேதாந்தம்.

எப்படி சூடு நெருப்பில் அடக்கமோ, அதுபோலவே மாயை பிரம்மத்தில் அடக்கம். சூட்டின் வெளிப்பாடு உண்மையாகத் தெரிவது ஒரு கால இடைவெளியில் மட்டுமே. அது ஒரு விளைவே தவிர, ஆதாரம் அல்ல. அந்த அடிப்படையிலேயே, மாயை நிலையானது இல்லை என்பது அத்வைத அறிவு.

மாயைபற்றி நாம் எப்படி அறிந்து கொள்வது?

மாயை எனும் கோட்பாடு மிகவும் நுண்ணிய கருத்தினால் பின்னப்பட்ட வியக்கத்தக்க, அழகிய காரணப் போர்வை. தக்க ஆசிரியரின் துணையில்லாமல், மாயையின் தத்துவ விளக்கங்களைக் கற்றல் அரிது. அத்தகைய ஆராய்ச்சி, உலகில் நாம் திடமாக ஏற்றுக் கொண்டுள்ள பல கோட்பாடுகளை எல்லாம் முற்றிலும் தகர்த்து, வேறொரு பரிமாணத்தை நமக்கு அறிமுகப்படுத்துகின்ற, ஆச்சரியமான, பாதை. எனினும், மனீஷா பஞ்சகம் எனும் இந்நூலினைப் பயில்வதற்கு, மாயை எனும் தத்துவத்தின் அறிமுகம் அவசியம் என்பதால், மாயைபற்றிய அறிமுகத்தை, ஒரு உதாரணம் மூலமாக பார்ப்போம்.

என்னுடைய கை மேசையில் இருக்கும் பழத்தினை எடுப்பதாகக் கொள்வோம். அதனால் என்ன தெரிகின்றது?

என்னுடைய கையின் இயக்கம் அல்லது செயல் தெரிகின்றது. இந்த விளைவின் காரணத்தை ஆராய்ந்தால், செயலின் காரணம் உடலின் தசைகளின் இயக்கம், நரம்புகளின் விசை, மூளைத் திசுக்களின் செயல் என்பதான, உடலின் இயந்திர இயக்கம் (motor-effect) எனப் புரிகிறது. மேலும் ஆராய்ந்தால், அத்தகைய உடலியந்திர இயக்கத்தின் காரணம், மனநிலையின் ஏற்ற ஒரு குறிப்பிட்ட மாற்றம் என்றே புரிகிறது. மனத்தில் விளைந்த இந்த நிலையை 'நோக்கம்' (the will) என்று கொள்வோம். அதனால், நோக்கமே ஆக்கத்தின் காரணமாகின்றது.

இந்த நோக்கத்தின் காரணத்தை மேலும் ஆராய்ந்தால், மனத்தில் அதற்கு முன்

விதைத்த மற்றொரு நிலை காரணம் ஆகிறது. இதனை 'ஆசை' (t he desi r e) என்று கொள்வோம். அதனால் ஆசையே, செயல் நோக்கத்தின் காரணம். மேலும் ஆய்ந்தால், அத்தகைய ஆசைக்கும் காரணம், மேசையில் இருக்கும் பழத்தைப் பற்றிய அறிவு. அந்த அறிவினாலேயே ஆசையும், ஆசையால் நோக்கமும், செயலும் நேர்ந்தன. எனவே அறிவே மூல காரணமாகின்றது. ஆகையால் அறிவு, ஆசை, நோக்கம் எனும் இம்மூன்றுமே செயல்களுக்கெல்லாம் காரணம் எனத் தெரிகின்றது.

மேலும் ஆராய்ந்தால், இந்த அறிவு, ஆசை, நோக்கம் ஆகிய மூன்றுமே விளைவுகள்தான். 'அறியும் சக்தி' என்ற ஒன்றினாலேயே அறிவு கிடைக்கிறது. 'ஆசைப்படும் சக்தி' என்ற ஒன்றினாலேயே ஆசை பிறக்கிறது; அது போலவே 'ஆக்கும் சக்தி' ஒன்றினாலயே நோக்கிய இயக்கம், செயலாகப் பிறக்கிறது. அதாவது, 'அறியும் சக்தி', 'ஆசைப்படும் சக்தி', 'ஆக்கும் சக்தி; என மூன்றுவிதமான சக்திகளினாலேயே, பூத உடலில், பூத உலகில் எல்லாப் படைப்புக்களும் விளைகின்றன. இந்த மூன்று விதமான சக்திளும் ஒரே சக்தியின் வேறுவிதமான வெளிப்பாடு என்பதால், இவற்றைப் பொதுவாகவே 'சக்தி' என்று அழைக்கலாம்.

இதனை மேலும் ஆராய்ந்தால், இந்த சக்தியின் காரணம், இதனின் வெளிப்பாட்டை சாட்சியாக மட்டுமே பார்த்திருக்கும் 'நான்' ஆகிய ஆத்மா என்பது விளங்க்கும். அதாவது, இந்த சக்திகள் ஆத்மாவில் அடங்கி இருக்கின்றன. ஏதோ ஒரு நேரத்தில், ஏதோ ஒரு வகையில் வெளிப்பட்டு, அதனால் விளைவுகளை ஏற்படுத்திவிட்டு, மீண்டும் வெளிப்படாமல், ஆத்மாவிலேயே அடங்கி இருக்கின்றன. அதனால், சக்திக்கு ஆதாரம் ஆத்மாவே.

நாம் சாதாரணமாக, உலக வழக்கத்தில், விளைவுகளை நோக்கி மட்டுமே நமது அறிவினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆதார அறிவினைத் தேடுகின்ற முனைப்பு, எல்லோருக்கும் சாதாரணமாக இருப்பதில்லை. அதனாலயே, இந்த எடுத்துக்காட்டில், கை பழத்தினை எடுப்பது ஒரு உண்மையான செயலாகத் தெரிந்து, அதனால், அச்செயலுக்கான சக்தியும் உண்மை என்று சொல்கிறோம். ஆக்கத்தினையும், ஆக்கத்தின் சக்தியையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. அதுபோலவே, உலகில் செயல்களும், படைப்புக்களும் உண்மையாகத் தெரிவதால், அதன் காரண சக்தியும் உண்மை என்று நினைக்கிறோம். அச்சக்திக்கு மாயை என்று பெயரிட்டால், அந்த மாயை உண்மை என்று சொல்கிறோம்.

ஆனால் 'ஆத்ம வித்யா' எனும் தன்னுணர்வறிவைத் தேடுகின்ற மாணவனுக்கு, இது சுலபம் அல்ல. அவனைப் பொருத்தவரை, உண்மை என்பது எல்லாக் காலத்திலும் மாறாமல் இருப்பது. அந்தவகையில், சக்தி இங்கே தோன்றி மறைகின்றது என்பதால், இந்த சக்தி உண்மையல்ல. ஆனாலும், உலக வழக்கத்தில், பழத்தை எடுத்த செயல் உண்மையாகத் தோன்றுகின்றது. பொய்யான சக்தி எப்படி உண்மையான விளைவினை ஏற்படுத்த முடியும்? அதனால், சக்தி உண்மையானதாகத்தான் இருக்க வேண்டும். அப்படி என்றால்,

சக்தி பொய்யாகவும், அதே சமயம் பொய்யாக இல்லாமலும் இருக்கிறது. விளக்க முடியாமல் இருக்கிறது. இதுவே ஆத்மனை அறியப் பயிலும் மாணவனது குழப்பம். அதனால் அவனைப் பொருத்தவரையில், மாயை என்பது பொய்யுமாய், பொய்யில்லாமையுமாய் காணப்படுகின்றது. ஒரு கண்ணாடியில் நம்து உருவத்தைப் பார்க்கிறோம். அந்த உருவம் இருப்பது உண்மை. ஆனால், அது உண்மையில்லை, வெறும் பிரதிதான் அல்லவா? இது போன்றே ஒரே சமயத்தில் ஒன்றே பொய்யுமாய், பொய்யில்லாமையுமாய் காணப்படுகின்றது.

ஆத்மனை உணர்ந்தவர்களுக்கோ எவ்விதக் குழப்பமுமில்லை. அந்த ஞானிகளுக்கு, காணுகின்ற உலகங்கள் எல்லாம், மாறிக் கொண்டிருக்கும் பொய்த் தோற்றங்கள். ஒரு கால இடைவெளியிலேமட்டுமே அவை உண்மையாகத் தோன்றினாலும், அவை யாவும் பொய்யே! அதனால், அவற்றுக்கெல்லாம் காரணமாய்க் கருதப்படும் மாயையும் பொய்யே.

இதனை உணரவேண்டுமென்றால், மாயைக்குள் அடைபட்ட நிலையிலிருந்து வெளிவரவேண்டும். அஞ்ஞானம் (அதாவது ஞானமில்லாத மற்ற அறிவுகள், உணர்வுகள்), ஒருபொழுதில் 'சட்டென' விட்டொழியும்போது, இது உணரப்படும். முற்றிலும் ஒளி சூழ்ந்தால், இருளை எப்படிக் காட்டமுடியும்? அதுபோலவே, ஆத்மன் எனும் ஒளியில் இருந்தால், அங்கே மாயை எனும் இருள் இல்லை. அதனால் அதனை அறிந்து கொள்ளும் அவசியமில்லை. அந்த ஒளியை முற்றும் உணராதபோது, மாயை எனும் இருளில் இருந்து கொண்டு, பொய்யினை மெய்யென நினைத்துக் காலச்சிறைக்குள் நாம் கட்டுண்டிருப்போம். அதனால், அதனை அறிந்த்து கொள்ளும் அவசியமில்லலை.

ஆனால், ஆத்மனை அறிந்து கொள்ள முயலும் மாணவனுக்கோ, இது இருளிலிருந்து ஒளியை நோக்கி நகரும் பாதைப் பயணம்; அதனால், 'இருளா, ஒளியா' என் மருட்சியும், எப்படி மாயையினை விளக்குவது என்ற அயற்சியும், அதனால், தக்க குருவின் தயவினைத் தேடுகின்ற தாக்கமும் பிறக்கிறது.

இந்த மூன்று அறியும் சக்தி, ஆசைப்படும் சக்தி, ஆக்கும் சக்தி ஆகியனவே சக்தியின் மூன்று வடிவமாக, ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி என்று முறையே அழைக்கப்படுகின்றன. சக்தி, ஈஸ்வரனைப் பிரியாமல் இருப்பதாகப் புராணங்கள் காட்டுவதும் இத்தத்துவமே.

உபநிடதங்கள் மாயையின் இந்த மூன்றுவித வெளிப்பாட்டின் காரணத்தையும் தருகின்றன. மாயையின் வெளிப்பாடு, பிரம்மத்திலிருந்தே என்பதால், பிரம்மத்தின் ஸ்த் அல்லது நிலையான சடத்தன்மை, சித் அல்லது முழுமையான அறிவு, ஆனந்தம் அல்லது முடிவில்லா ஆனந்தம் அல்லது அமைதி ஆகிய பண்புகளுடன் மாயை இழைந்திருக்கின்றது.

ஞான சக்தி என்பது பிரம்மத்தின் 'சித்' வெளிப்பாடாகவும், இச்சா சக்தி என்பது பிரம்மத்தின் ஆனந்த வெளிப்பாடாகவும், கிரியா சக்தி என்பது பிரம்மத்தின் 'ஸத்'

வெளிப்பாடாகவும் அமைந்தாக வேதாந்தம் விளக்குகின்றது. மேலும், மாயை தன்னுடைய முச்சக்திகளின் பலவிதமான வெளிப்பாட்டின் காரணமாகவும், தன்னுடைய முக்குணங்களின் பலவிதமான வெளிப்பாட்டின் காரணமாகவும், உலகங்களையும் அதில் உடல், பொருள், செயல்களையும் பலவிதமாகப் படைக்கின்றது.

இதனைத்தான் 'த்ரிகுணா' என்று மேலே சொல்லப்பட்டது. இக்குணங்கள் என்ன? மாயை எது என்றே முழுதும் விளக்கப்பட முடியாத போது, எப்படி அதனுடைய குணத்தினை அறியமுடியும்?

இந்த மாயை நம் அறிவிற்கு அப்பாற்பட்டது எனினும், மாயை மூன்று குணங்கள் கொண்டதாகும் என்பதனை, அந்த மாயையால் தோற்றுவிக்கப்பட உலகங்களின் குணங்களின் காரணத்தால் அறியலாம். படைக்கப்பட்ட பொருட்களை ஆராய்வதால், அவற்றின் குணங்கள் அறியப்பட்டு. அதனால், அதைப் படைத்த சக்தியின் குணத்தினையும் அனுமானிக்க முடியும் என்பதால். அந்த அடிப்படையிலேதான், மாயையினால் படைத்ததாகக் கருதப்படும் உலகங்களை ஆராய்ந்து, மாயையின் குணங்களாக மூன்று அனுமானிக்கப்படுகின்றன.

முதலானது 'ஸாத்விக்' என்கிற அறியும் குணம். இது தூய ஒளியையும், தெளிந்த அறிவையும், சீரான செயலையும் குறிக்கின்றது.

இரண்டாவது 'ரஜஸ்' எனும் செயலாற்றும் குணம். இது கானல் நீர் போன்ற மாய ஒளியையும், உணர்ச்சியால் கிளர்ந்த அறிவையும், அடங்காமல் நடத்தும் செயலையும் குறிக்கின்றது.

மூன்றாவது 'தமோ' என்னும் சடலமான குணம். இது இருளையும், அறியாமையையும், சோர்ந்த அல்லது தொய்ந்த செயலையும் குறிக்கின்றது.

இம்மூன்று குணங்களின் தாக்கத்தின் அளவினைப் பொருத்தே எல்லா உலகமும், பொருட்களும், செயல்களும். சக்தியின் வெளிப்பாடு 'ஸாத்விக்' குணத்தின் ஆதிக்கத்தால் நிறையும்பொழுது 'ஸாத்விக மாயை', அல்லது மாயை என்றே அழைக்கப்படுகின்றது. சக்தியின் வெளிப்பாடு 'ரஜஸ்' குணத்தின் ஆதிக்கத்தால் நிறையும்பொழுது 'அவித்யா' என்றும் 'தமோ' குணத்தின் ஆதிக்கத்தால் நிறையும்பொழுது 'தாமஸிக்' என்றும் அழைக்கப்படுகின்றது.

மாயையின் இந்த மாறுபட்ட சக்திகளின் வழியாகவே ஆத்மா வேறு வேறு விதமாக வெளிப்படுகின்றது. ஸாத்விக் மாயையினால் பரமாத்மனாக, ஈஸ்வரனாக ஆத்மா காணப்படுகின்றது. அவித்யா எனும் மாயியினால், உடல்களிலே ஜீவாத்மனாக வெளிப்படுகின்றது. தாமஸிக் மாயையினால், சடப் பொருளாக, ஆத்மா காணப்படுகின்றது.

சடப்பொருளிலே பிரம்மத்தின் 'ஸத்' பண்பு மட்டுமே காணப்ப்டுகின்றது. ஜீவனிலே

பிரம்மத்தின் 'ஸத்' மற்றும் 'சித்' பண்புகள் காணப்படுகின்றது. 'ஆனந்தம்' எனும் சுக ஜீவனுள்ளே ஒடுங்கிக் கிடக்கிறது. பரமாத்மா எனும் ஈஸ்வரனிலே மட்டுமே, பிரம்மத்தின் 'ஸத்-சித்-ஆனந்தம்' நிறைந்து கிடக்கின்றது. இது மாயையின் வேறுபாடுகளினால் அறியப்படும் வெளிப்பாடே அன்றி, உண்மையில் ஆத்மாவில் எந்த வேறுபாடும் இல்லை. இதுவே மாயா தத்துவம்.

உலகங்கள் எல்லாம் ஒரே பேருடல். அதுவே ஈஸ்வரனால் கோர்க்கப்பட்டு, ஈஸ்வரனாலேயே தாங்கப்பட்டு விளங்குகிறது. இதனை 'ச்வேதாஷ்வர உபநிடதம்' விளக்குகின்றது.

अस्यावयवभूतैस्तु व्याप्तं सर्वमिदं जगत ।

அஸ்யாவயவபூ$_4$தைஸ்து வ்யாப்தம்' ஸர்வமித$_3$ம்' ஜக$_3$த |

ஆதலால் நாம் அறிந்து கொள்வது என்ன?

பிரம்மத்தினுள்ளே ஆழ்ந்திலங்கும், வரையறுக்க முடியாத சக்தியே 'மூலப்ரக்ரிதி' என்று அழைக்கப்படுகிறது. அது வெளிப்படும்போது, ஸாத்விக மாயை அல்லது மாயை என்றும், அவித்யா என்றும் தாமஸி என்றும் மூன்று நிலைகளாகக் காணப்படுகின்றது. ஆத்மா இம்மூன்று மாய சக்திகளின் ஊடாக வெளிப்படும்போது, முறையே ஈஸ்வரன், ஜீவன் மற்றும் சடப்பொருள் என மூன்று வடிவமாக உணரப்படுகின்றது. இந்த மூன்று வடிவங்களைத்தான், ஸ்ரீபகவத்கீதை 'புருஷோத்தமா', ' அக்ஷரா', 'க்ஷரா' அல்லது 'பரமாத்மா', 'கூடாஷ்தா', 'பூதா' என்ற பெயர்களால் அழைக்கிறது.

மேலும் நாம் புரிந்து கொண்டது, மாயா சக்திகள் பிரம்மதிலிருந்தே வெளிப்பட்டுப் பிரம்மத்திலேயே அடங்கி விடுகின்றன, அதனால் அவித்தை விலகும்போது, ஜீவாத்மா-ஈஸ்வர ஐக்கியம் நடக்கிறது என்பதும், அதேபோல, மாயை விலக்கியபோது, ஈஸ்வரனும் பிரம்மத்திலேயே ஐக்கியமாகி விடுகிறார் என்பதும் ஆகும்.

அத்தகைய ஞானமடைந்தவர்களால் மட்டுமே, மாயை ஒரு பொய் என்றும், அதனால் மாயையினால் ஏற்பட்ட உலகங்கள் பொய்யென்றும் அறிவிக்க முடிகிறது. மற்றோரால் அது நிர்ணயித்துக் கொள்ள முடியாத தத்துவச் சோதனை.

உண்மை எப்போதும் எளிதாகத்தானிருக்கும். நம்முடைய அவித்யா எனும் ஞானமிலாத் தன்மையினாலேயே பொய்யெது, மெய்யெது எனும் கலக்கம்

ஏற்படுகின்றது. வேதாந்தத்தில் அடிக்கடி இரண்டு எடுத்துக்காட்டுக்கள் கையாளப்படுகின்றன. ஒன்று, தன்னுடைய உடலில் இருந்தே நூலை எடுத்து அழகிய வலை செய்து, அதிலே வசித்துப் பின் அதனையே விழுங்கி விடுகின்ற சிலந்தி. இது ஈஸ்வரனது உலகைப் படைத்துக் காத்து அழிக்கின்ற செயலுக்கு ஒப்பாகக் காட்டப்படுவது. மற்றது கயிற்றில் பாம்பினைக் காண்கின்ற மயக்கம். இது 'கல்பிதம்' எனும் மாயா தத்துவத்துக்கு உதாரணம். இவ்வுதாரணங்கள் மிகவும் எளிமையாகத் தோன்றினாலும், ஆழ்ந்த அறிவினை வெளிக்கொணரும் ஆற்றல் மிக்கவையாகக் கருதப்படுகின்றன.

முதல் ஸ்லோகத்தில் சொல்லியபடி, ஜீவன் மூன்று அவஸ்தைகளில் இருப்பதைப் போலவே, உலகங்களும் மூன்று அவஸ்தைகளில் இருக்கின்றன. இவற்றை முறையே 'காரண அவஸ்தை' (ஆதார அனுபவம்), 'சூக்ஷ்ம அவஸ்தை' (அணுமயமான அனுபவம்), 'ஸ்தூல அவஸ்தை' (பூத அனுபவம்) என்கிறது உபநிடதம்.

மாண்டுக்ய உபநிடதம், முதல் ஸ்லோகத்தில் கண்ட ஜீவனின் இந்த முன்று அனுபவ உலகங்களையும் முறையே 'விஸ்வா' (விழிப்புலகம்), 'தைஜஸா' (கனவுலகம்), மற்றும், 'ப்ரக்ஞா' (காரண அறிவுலகம்) என்று அழைக்கின்றது. அதேபோல இரண்டாம் ஸ்லோகத்தில் கண்ட உலகங்களின் இந்த மூன்று அனுபவ நிலைகளையும் முறையே 'விரட்' (பூத உலகம்), 'ஹிரண்ய கர்ப்பம் ' (நுண்ணிய கருவுலகம்), மற்றும், 'ஈஷ்வர மாயா' அல்லது 'மாயை' (மாயாவுலகம்) என்று அழைக்கின்றது.

அதாவது ஜீவனுக்கும், உலகங்களாகக் காணப்படும் ஈஸ்வரனுக்கும், முறையே மூன்றுவித உடல்கள், அந்த உடல்களுக்கு மூன்றுவித அனுபவநிலைகள், அந்த மூன்று அனுபவ நிலைக்கும் மூன்று பெயர்கள்.

காரண அவஸ்தையில் உலகம், ஜீவனது ஆழ்துயிலைப் போல, வித்தாக அடங்கி இருக்கிறது. வேதங்கள் இந்தக் காரண அவஸ்தையில் இருக்கும் உலகத்தை 'மாயை' என்றும், அறிவுபூர்வமான ஈஸ்வரனிலேயே (பிரம்மத்தில்) இந்த மாயை அடங்கி இருப்பதாகவும் கூறுகின்றன. புராணங்களும் இந்த மாயையினையே 'சக்தி' என்று அழைக்கின்றது. சக்தி எப்போதும் மற்றதைச் சார்ந்தது அல்லவா? மாயா சக்தி ஈஸ்வரனையே சார்ந்து இருக்கின்றது.

மாயாவுலகிலிருந்தே முதலில் நுண்ணிய கருவான ஹிரண்ய கர்ப்பம் பிறக்கிறது. இது முதலில் ஆகாயத்தையும் (பரவெளி), பிறகு வாயு, தீ, நீர்,மண் ஆகிய ஐந்து பூதங்களையும் சூக்ஷ்ம அவஸ்தையாகப் படைத்தது. இவையே சூக்ஷ்ம ஐம்பூதங்கள் ஆகும். இந்த சூக்ஷ்ம ஐம்பூதங்கள் தம்முடைய காரண அறிவாகிய ஸத்வ குணத்தினால் உருவாக்கியவைதான் நம்முடைய மனமும், ஞானேந்திரயங்களும். அதனாலேயே மனமும், ஐம்புலங்களும் எப்போதும் அறிவுக்கருவியாக இருக்கின்றன.

இந்த சூக்ஷ்ம ஐம்பூதங்களின் செயற்குணமாகிய ரஜோ குணத்தினால், கர்மேந்திரியங்களும் பிராணனும் தோன்றின. பிராணன் எனும் உயிர் மூச்சு எப்போதும் செயல் ஆற்றிக் கொண்டிருப்பது இதனாலேயேதான். அதேபோலவே, இந்த சூக்ஷ்ம ஐம்பூதங்களின் சடமான தன்மையாகிய தமோ குணங்களினால், உலகில் தூலமான பஞ்சபூதங்கள் தோன்றின. இவையே, உலகில் நாம் அனுபவிக்கும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய தூல ஐம்பூதங்கள். பிறகு, இந்த தூல ஐம்பூதங்களின் கலப்பினாலேயே, படிப்படியாக உலகத்தில் எல்லாச் சடப்பொருட்களும் தோன்றுகின்றன. 'பஞ்சீகரணம்' எனும் சிறிய நூலில், ஆதி சங்கரர் இப்பெரிய அறிவினை விளக்குகின்றார்.

மாண்டுக்ய உபநிடதம், ஜீவனின் மூன்று அனுப உலகங்களையும், ஈஸ்வரனின் மூன்று அனுபவ உலகங்களையும், ஆதார அறிவின் அடிப்படையில் ஒன்றே என்று காட்டி அதன் மூலம், ஜீவ-ஈஸ்வர ஐக்கியத்தைக் காட்டுகிறது.

வேதங்கள், இந்த மூன்று ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்குமான இந்த மூன்று அனுபவ உலகங்களையும், முறையே ‘அ’, ‘உ’, ‘ம்’ என்ற விதை-எழுத்துக்களால் குறிப்பிடுகின்றது.

அதாவது ‘அ’ என்பது ஜீவனின் விழிப்புலகத்தையும், அதன் விரிவான, ஈஸ்வரின் பூத உலகத்தையும் காட்டுகிறது. அதேபோல ‘உ’ என்பது ஜீவனின் கனவுலகையும், அதன் விரிவான ஈஸ்வரனின் நுண்ணிய கருவுலகையும் குறிக்கிறது. ‘ம்’ எனும் எழுத்து, எல்லா உலகங்களையும் தன்னுள்ளே இழுத்துக்கொண்டு, காரணமாயிருக்கின்ற ஜீவனின் உறக்கத்தையும், அதன் விரிவான ஈஸ்வர மாயையும் காட்டுகின்றது.

‘அ’ எனும் ஒலி விரிவதாலும், ‘உ’ எனும் ஒலி ஒடுங்குவதாலும், ‘ம்’ எனும் ஒலி மூடுவதாலும், இந்த விதை எழுத்துக்கள், இந்த உலகங்களுக்கு மிகப் பொருத்தமான குறிகளே அகும். இவ்வுலகங்கள் எல்லாம் ஒன்றாகிக் கலந்து, சாட்சியாக இருக்கும் பிரம்ம்மே ‘அ உ ம்’ எனும் ஒலியால் எழும் ‘**ஓம்**’ எனும் மந்திரம். அதனாலேயே வேத மந்திரங்கள் ‘ஓம்’ எனத் தொடங்கி ‘ஓம்’ எனவே முடிந்து, எல்லாம் பிரம்ம மயம் என்று அறிவுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

சரி, இறைவன் இவ்வுலகைப் படைத்தார் என்ற கோட்பாட்டின் காரணம் என்ன? இதற்கு விடை, காரண காரிய விவாதமே ஆகும் (cause and ef f ect). படைப்புக்கு, படைத்தவன் காரணம் ஆகவேண்டும் என்ற கட்டாயத்துக்குக்காகவே, இறைவனே உலகின் படைப்புக்குக் காரணம் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதனை 'நிமித்த காரணம்' என்று வேதம் கூறுகிறது.

அப்படியானால், இறைவனுக்கு உலகைப் படைப்பதற்கான அறிவும், பொருளும் அவசியமல்லவா? அது எப்படி சாத்தியாமானது என்றால், இறைவன் அறிவுமயமானவர் என்ற வாக்கினால், இறைவன் வேறு, அவரது அறிவு வேறு என்றில்லை, அதனால் அறிவு பூர்வமான இறைவனே உலகங்களின் படைப்புக்கு

மூல காரணம் என்று ஆகிறது. மேலும், உலகைப் படைக்க அவரது உடமையான மாயையே மூலப்பொருளாக எடுத்து கொண்டிருக்கிறார். அப்படி என்றால், இறைவன் தன்னுடைய மாயையினையே உலகமாகக் காட்டிக் கொண்டிருக்கிறார். அதாவது, உலகைக் காண்கையில் கடவுளைக் காணுதல் நியதி. இதனையே 'உபாதான காரணம்' என்கிறது உபநிடதம்.

அப்படி என்றால், உலகின் நிறை குறைகளுக்கெல்லாம் இறைவனே காரணம் என்றாகிறதல்லவா? எல்லாப் பாவபுண்ணியங்களும் அவருடையதே அல்லவா? இவ்வினாவிற்கு அத்வைத ஞானம் கூறும் விடைதான் 'கல்பிதம்' என்று மேலே ஆதிசங்கரரால் காட்டப்படுகிறது.

கல்பிதம் எனும்சொல், ஒன்றின் மேல் மற்றொன்று ஏற்றி வைக்கப்பட்ட தோற்றம். (Super -I mposi t i on). கல்பிதம் எனும் இந்தக் கருத்து, மிகவும் ஆழ்ந்த கருத்து; பெரும்பான்மையான மனிதர்களது மனமும் அறிவும் எதனை விழைகிறதோ அதனையே கல்பிதமாக மாயை தருகின்றது.

இன்றைய கற்பனைகள் நாளைய விளைவுகளாக, தூல உலகில் வருகின்ற காரணமும் இதுவே. விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்று நாம் கொண்டுவரும் மாற்றங்களும், தூல, சூக்ஷ்ம அறிவினால் ஜீவன் விரும்புகின்ற படைப்புக்களின் கல்பிதமே ஆகும். அதனாலேயே அத்வைதம் எனும் ஆதார அறிவின் அடிப்படையில் நோக்காமல், தூல உலகங்களையே ஆராய்கின்ற அறிவியல் மனதில், அதன் முயற்சிக்கும், விருப்பத்துக்கும் ஏற்ப, கல்பிதமான விளைவுகள் கிடைத்துக் கொண்டிருகின்றன.

தூல உலகத்தை மட்டுமே ஆராய்கின்ற, தூல உலகங்களுக்கு, ஒரு கற்பனையான தொடக்க காலத்தினைக் கொடுத்து, முடிவுக் காலத்தை நிர்ணயிக்க நினைக்கின்ற அறிவியலுக்கு, இந்தக் கல்பிதம் எனும் அத்வைதக் கோட்பாடு ஒரு தத்துவ வினா (Philosophical Challenge). அத்வைத ஞானத்தினைப் பயில்வோருக்கு, கல்பிதம் என்பது அவசியமான தத்துவப்படி; அதில் ஏறியே தம்மை அறியும், அதன்மூலம் இறைவனை அடையும் ஆன்ம வினா (Spi r i t ual Chal l enge) விற்கு நம்மால் விடை தேடமுடியும். அதற்கான தடங்களே உபநிடதங்கள்.

'மரத்துள் மறைந்தது மாமத யானை' என்பார்கள். மரத்தாலான யானையினைக் காணும்போது, அதனை யானை என்போம். எனினும், அது மெய்யன்று, அது மரமே எனும் ஆதார அறிவு கூறும். இங்கே யானை என்பது மரத்தில் கல்பிதம். அத்வைத விளக்கங்கள் எல்லாம் பொதுவாகக் காட்டும் ஒரு உதாரணம் - இருளில் கயிற்றில் தெரியும் பாம்பு. இங்கே பாம்பு கயிற்றில் கல்பிதம். இதனைப் போலவே, உலகங்களும், படைத்தவன் என்ற பதவியும், பிரம்மத்தில் கல்பிதம்.

அத்வைத ஞானம் எனும் ஒளிவிளக்கால் மாயையினைக் கடந்த பிரம்மத்தை உணரும்போது, கல்பிதம் ஏதும் இல்லை. அதனால் அங்கே உலகம் இல்லை! படைத்தவன் என்ற பதவியும் இல்லை. எங்கும் ஒன்றேயான ஆனந்தம்.

இதனையே 'ஸர்வம் பிரம்ம மயம்' என்பர் சான்றோர். இதனை உணராதவரையில், உலகங்கள் தொடர்ந்து தோன்றியும் அழிந்தும் வருவது நடக்கும். அத்தோற்றமும், அழிவும், அவற்றின் தன்மையும், வேறுபாடுகளும் நாமே நம்முடைய அனுபவ உலகங்களில் 'கல்பிதமாக' உருவாக்கிக் கொண்டிருப்போம்.

இவ்வாறு முதல் இரண்டு ஸ்லோகங்களினால் ஜீவ-ஈஸ்வர ஐக்கியத்தை விளக்கி, அதனால் சம நோக்கினை உணர்த்தி, இவ்வரிய ஞானத்தை உணர்ந்த புலையனும் வணங்கத்தக்க குருவே எனத் தமது நிச்சயித்த அறிவையும் தருகிறார் பகவான் ஆதி சங்கரர்.

இனி வரும் ஸ்லோகத்தில் அத்தகைய ஞானம் அடைய நாம் செய்ய வேண்டிய கடமைகளையும், அதனால் அடையும் பலனையும் விளக்குகின்றார்.

மூன்றாம் ஸ்லோகம்

शश्वन्नश्वरमेव विश्वमखिलं निश्चित्य वाचागुरोः
नित्यं ब्रह्म निरन्तरं विमृशता निर्व्याज शान्तात्मना,
भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके
प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनीषा मम ॥3॥।

ஶஶ்வன்னஶ்வரமேவ விஶ்வமகி$_2$லம்’ நிஶ்சித்ய வாசாகு$_3$ரோரஃ

நித்யம்’ ப்$_3$ரஹ்ம நிரந்தரம்’ விம்ரு’ஶதா நிர்வ்யாஜ ஶாந்தாத்மனா,

பூ$_4$தம்’ பா$_4$வி ச து$_3$ஷ்க்ரு’தம்’ ப்ரத$_3$ஹதா ஸம்’வின்மயே பாவகே

ப்ராரப்$_3$தா$_4$ய ஸமர்பிதம்’ ஸ்வவபுரித்யேஷா மனீஷா மம ॥3॥।

தொடராகத் தோன்றுலகு தொடர்ந் தழிவதாகும்

தொலையாத பிரம்மமெனத் தூயகுரு ஞானம்

தடமாகக் குவியுமனந் தெளியுமதி கொண்டு

தவமாக ஞானாக்நி தத்துவத்தில் நின்று

விடமான முக்கால வினையாவும் கொன்று

விட்டுவிட உடல்கரும விளையாட்டே என்று

மடமான தூலவுடல் மாற்றத்தை ஏற்போர்

மனமார குருஅவரென் திடமான முடிவு (3)

பொருள்:

ஒவ்வொரு கணத்திலும் தொடர்ந்து இருப்பதுபோல் தோன்றும் இந்த உலகங்கள் எல்லாம், ஒவ்வொரு கணமும் அழிந்து கொண்டே இருக்கின்றன. இந்த உண்மையை குருவின் உபதேசத்தால் புரிந்து கொண்டு, (அதனால், 'ஜகத் மித்யம், பிரம்மம் சத்யம்' எனும்) இந்த உயரிய ஞானத்தினை, எப்போதும், தூய்மையும், அமைதியால் குவிந்த மனத்தினாலும் தியானித்து, அதன் பயனாக, முக்காலங்களிலும் அறிந்தும் அறியாமலும் செய்த வினைப்பளுவை எல்லாம் இத்தூய ஞானத்தீ முற்றும் சாம்பலாக்கிவிட, பிறகு (இவ்வுடல் தோன்றுவதற்குக் காரணமான) ‘பிராரப்தம்‘எனப்படும் மிஞ்சி நிற்கும் வினைப்பயனை மட்டும் (வேண்டுதல் வேண்டாமை எதுவும் இல்லாமல்) முற்றிலும் ஏற்றுக்கொள்ளும் உறுதியுடன், இப்பிறவிக்கான உடலை வெறுமனே சாட்சியாகச் சுமந்து கொண்டிருக்கும் இவரே குரு என்பதே என்னுடைய திடமான முடிவு.

முதல் வரி:

ஶஶ்வன்ன = தொடர்வதாகத் தோன்றினாலும்; நஶ்வரம் = தொடர்ந்து அழிந்து கொண்டே இருப்பது; ஏவ = என்பதாகிய; விஶ்வம் அகி$_2$லம் = அகில உலகங்கள் எல்லாம் (படைத்தன எல்லாம்); நிஶ்சித்ய = உறுதிப்படுத்திக் கொள்க; வாசா கு$_3$ரோர: = குருவின் உரையின்படி;

இரண்டாம் வரி:

நித்யம் = எப்போதும் நிலைத்த; ப்$_3$ரஹ்ம = பிரம்மம்; நிரந்தரம் = மாறுபாடற்றது; விம்ருஶதாம் = (இந்த அறிவில்) கவனமான தியானம் செய்பவரால்; நிர் வ்யாஜ = களங்கமற்ற (தூய அறிவுடன்); ஶாந்த் ஆத்மனாம் = ஒருமுனைப்பட்ட மனமுடன்;

மூன்றாம் வரி:

பூ$_4$தம் = கடந்த கால; பா$_4$வி ச = இப்போது மற்றும் வருங்காலம்; து$_3$ஷ்க்ரு’தம் = அறியாமலும் செய்த வினைகள்; ப்ர த$_3$ஹதாம் = முற்றும் சாம்பாலக்கி; ஸம் வின்மயே = மிகச் சிறந்த ஞானம்; பாவகே = எரியும் தீயாகிய (ஞானத்தில்);

நான்காம் வரி:

ப்ராரப்$_3$தா$_4$ய = பிராரப்தம் எனும் இவ்வுடலுக்கான முன்வினைகள்; ஸமார்பிதம் = முற்றிலும் ஏற்றுக் கொள்ளுதல்; ஸ்வ வபூர் = தூல உடல்கள்; இத் யேஷா = இவ்வாறு எவர்; மனீஷா மம= என்னால் நிச்சயிக்கப்பட்ட அறிவு.

விளக்கம்:

முதல் இரண்டு ஸ்லோகங்களில் ஜீவாத்மாவும், பரமாத்வாவும் ஒன்றே என்ற ஞான சாரத்தைக் கொடுத்த ஆதி சங்கரர், இந்த மூன்றாம் ஸ்லோகத்தில் அத்தகைய உயரிய ஆத்ம ஞானத்தை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும், அதனால் வரும் எத்தகைய ஞானத்தில் நாம் நிலையாக இருக்க வேண்டும் என்பதையும், பிறகு அதனால் நாம் அடையும் பயனையும் வலியுறுத்துகின்றார்.

நான் எனும் அறிவே நித்யம், மற்றதெல்லாம் அழியக்கூடியது; அந்த நான் எனும் ஆத்மாவே பிரம்மம் எனும் பேருண்மையை உணர்தலே மனிதவாழ்வின் குறிக்கோள். அந்த ஞானத்தை இந்தப் பிறவியிலே அடைவதற்கு, நமக்கு எத்தகைய தகுதிகள் வேண்டும் என்பதுதான் முதல் பாடம்.

'நிர் வ்யாஜ' எனும் மனத்தூய்மையே முதல் தகுதி; தூய மனம் அடைவதற்கும், அந்த நிலையிலேயே இருப்பதற்கும் நாம் மிகவும் உழைக்க வேண்டும். அதற்கு ஒரு எளிய வழி என்னவென்றால், மனத்தின் குணத்திலேயே மாற்றத்தை ஏற்படுத்துவது. மனம் ஆசையின் வித்து என்பதால், எப்போதும் தூய்மையான பலனையே நமது ஆசையாக ஆக்கினால், மனம் தூய்மையையே நாடும், அதனாலேயே மனம் தூய்மை அடைந்து விடும். அப்படி என்றால், முதலில் எது தூய்மையான பலனைத் தருவது என்ற அறிவும், அதனையே அடையவேண்டும் என்ற ஆசையையும் வளர்த்துக் கொள்ளப் பழக வேண்டும்.

தூய அறிவு இருந்தால், 'சாந்தாத்மம்' எனும் அமைதியால் குவிந்த மனத்தினை நாம் அடைய முடியும். அமைதி என்பது ஆசையின் விளைவால் எழும் உணர்ச்சிகளால் அலைபாயாத மனம். தூய ஆசைகளினால், அமைதி பெருக ஆரம்பிக்கும். அத்தகைய மனம் வளரவும், குறிக்கோளை நோக்கிக் குவியவும், யோகப் பயிற்சிகள் துணையாகின்றன.

இதற்கு 'யமமம்', 'நியமம்' என்று சொல்லப்படுகின்ற எட்டுவித யோகப் பாதைகள் உதவியாக இருக்கின்றன. அவற்றைப் பழகுதல் அவசியம். அதற்குத் தக்க குருவின் உதவி தேவை.

தூய அறிவும், அமைதியும் குறிக்கோளும் உடைய மனமும் அமைந்து விட்டால், தக்க குருவின் உபதேசத்தை உறுதியாக நாடுகின்ற அவசியமும், உற்சாகமும் தோன்றும்.

கற்றல் என்பது குருவுடைய நேரடிக் கருணை, வார்த்தை வடிவங்கள், நல்ல நூல்களின் பயன் எனப் பலவகையினாலும் அடையும் பயிற்சி. இருப்பினும், குருவிடம் நேரடியாகச் சரணடைந்து கற்பதே ஞான யோகத்திற்கான வழி. அவரது துணையுடனே தத்துவ விசாரணை, ஆய்தல் எனப்பல பயிற்சிகளை ஏற்பதும், அதனால் பலன்பெறுவதும் முடியும். உண்மை அறிவினை அடைவதற்கு, நம்மை வழிநடத்தும் குருவின் துணையுடனே நடக்க வேண்டும். மனம் முதிர்ந்த பொழுது,

அத்தகைய குருவினை நம்மால் அடையாளம் கண்டு, அடைய முடியும்.

மேற்கூறிய மூன்று தகுதிகளையும் அடைந்தால், நமக்கு முதல் இரண்டு ஸ்லோகங்களில் உபநிடத சாரமாகக் காட்டப்பட்ட, ‘ஜீவபிரஹ்ம ஐக்கிய ரகசியம்’ எனும் ஈறில்லா அத்வைத ஞானம் கிடைக்கும். அந்த ஞானத்தை 'நிஷ்சித்ய' எனும்படியாக, உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். உறுதியற்ற நிலைக்குக் காரணம், **ஐயம் என்ற நோய்**.

ஆராயும் நோக்கில் ஏற்கும் ஐயம் ஆரோக்கியமானது. அது அறியும் பொருட்டு எழும் கல்விப்படிகள். ஆராய்வதற்கல்லாமல், உலகியல் காரணமாகவும், குணக்கேட்டின் காரணமாகவும் ஐயம் கொண்டு குருவின் வார்த்தைகளிலும், ஆய்ந்த உண்மைகளிலும் உறுதி இல்லாமல் இருப்பது என்பது ஞானம் அடைந்தும் அதனை இழந்த நிலையாகும். நமது ஞான உறுதியினைக் கலைப்பதற்கு, உலகியல் விஷயங்களும், ஆசைகளும் காரணமாகின்றன. அதனால்தான் ஞான நிஷ்டை என்பது, மிக மிக எச்சரிக்கையாக நாம் வாழ்க்கைப்பாதையை அமைத்துக் கொள்வதலாயே அடையக் கூடியதாக உள்ளது. அப்படி இருப்பின், ஐயம் நீங்கி, நமக்குள்ளே மனீஷா எனும் நிச்சயித்த அறிவு கிடைக்கும். அந்த அறிவு, சம நோக்கினை அளிக்கவல்ல அத்வைத பலனைத் தருகின்றது.

உறுதியான நிச்சயித்த அறிவு, நம்முள் நிலை பெற வேண்டும். அதற்கு தக்க பாதை, ‘நித்யம் ப்ரஹ்மா நிரந்தரம் விம்ரிஷதா’ எனக் கூறியபடி, எப்போதும் நானே பிரம்மம், நான் பூரணமானவன் என்னும் உறுதியான எண்ணத்திலேயே தியானம் செய்ய வேண்டும். அதற்குத் துணை உண்மைக்குப் புறம்பான செயல்களையோ, எண்ணங்களையோ முற்றிலும் நீக்கி உலகில் வாழ்ந்து வருவது ஆகும். அதாவது, ஞானப்பாதையில் பயணிப்பவர்கள், நமது உலக நடத்தையில் உயரிய மாற்றத்தைக் காட்டி நடத்தல் அவசியம். ஆசை, சினம், பொறாமை என்றான தீய குணங்கள் இல்லாமல், எதனையும் சம நோக்கில் காணும் பக்குவம் நமது வாழ்க்கைப் பண்பாக இருக்க வேண்டும்.

அத்தகைய பண்பினால், ஆத்ம ஞானத்திலேயே நிலைத்து நிற்க முடியும் என்றால், அதன் பலனாக, உடல்களுக்கு வித்தாகின்ற வினைகள் எல்லாம் அழிந்து, பிரம்ம மயமான உணர்விலேயே அந்த ஞானியால் லயிக்க முடிகிறது. அந்நிலையிலேயே, ‘அகிலங்கள் எல்லாம் அழியக்கூடியன, ஆதார அறிவாகிய நான் எனும் ஆத்மாவே இரண்டற்று, எப்போதும் இருக்கும் உண்மை’ என்ற பேருண்மையில் அவரால் திளைக்க முடிகிறது. அப்படிப்பட்ட உயர்ந்த நிலையிலே, தற்போது ஏற்றுள்ள பூதவுடலும் தன்னுடையதல்ல என்ற வைராக்கியம் ஏற்பட்டு, அவ்வுடல் அடையும் எல்லாவித சுகதுக்கங்களையும், அவ்வுடல் ஏற்கக் காரணமான வினைப்பளுவாக, முற்றிலும் சரியெனவே ஏற்றுக் கொள்ளும் உறுதி பிறக்கிறது.

பிறகு அவர் ஓர் பிரம்ம ஞானியாக, உடல் எனும் கூட்டை வெறுமனே சுமந்து திரிகின்றவராக, நான் எனும் ஆணவம் இல்லாத காரணத்தால், அவரது உடல், மனம் செய்யும் எந்த வினைகளுக்கும் காரணமற்ற சாட்சியாகவே இருக்கிறார்.

இந்த நிலையே '**ஜீவன் முக்தி**' எனப்படுகிறது. இதன் பலன் என்ன?

நான் என்னும் அறிவு வினைகளுக்குச் சாட்சிதானே ஒழிய, வினைசெய்பவன் அல்ல.

கரும நியதி என்பது என்ன?

'நான்' செய்கின்றேன் என்ற உணர்வுடன் செய்யப்படும் எல்லாச் செயல்களும் கருமம் ஆகும். அக்கருமத்தினால் வரும் பயனை, 'நான்' எனும் உணர்வுடன் செய்த ஜீவாத்மா அனுபவித்தே ஆக வேண்டும். இதுவே கரும நியதி (Laws of Karma). இந்த நியதிக்கு மாயைக்குள் விளங்கும் எல்லா உயிர்களும் கட்டுப்பட்டே ஆக வேண்டும். நல்ல பலனை விரும்பிச் செய்த வேதங்களின் தருமப்படி நடத்தப்பட்ட கருமங்களின் பயன் 'ஆகம கருமம்' என்ற பெயரில் குவிக்கப்பட்டும், தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்த மற்ற எல்லா வினைப் பயன்களும் 'சஞ்சித கருமம்' என்ற பெயரில் குவிக்கப்பட்டும், ஜீவாத்மாவின் பயணத்தில் கூடவரும் பலன் மூட்டைகளாக இருக்கிறது.

இவற்றை உடலால் அனுபவித்துக் கழிக்கும்வரை பிறவிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இப்பிறவியிலேயே, இந்த வினைப்பலன் மூட்டைகளை முற்றிலும் அழிக்க வேண்டும் என்றால், அதற்கான ஒரே வழி, அவற்றை ஆத்ம ஞானம் எனும் அறிவுத் தீயில் சாம்பலாக்குவது மட்டுமே! ஒருவேளை இவ்வனுபத்தினை முற்றும் கழிக்காமலே இவ்வுலகில் ஒருவர் மரணத்தால் உடலை இழந்தால், மீண்டும் பிறந்து குவித்து வைத்த வினைப்பயனை அனுபவித்து அழிக்க வேண்டியிருக்கும்.

இந்தக் கருமவிதியே பிறவிக்குக் காரணம். நான் என்ற உணர்வுடன் செய்யப்படும் எல்லாச் செயலின் பலனும் அச்செயலுக்கான ஆசைகளும், மெல்லுடனின் ஆழ்மனதில் பதிந்து விடுகின்றன. இவைகளுக்குப் பெயர் 'வாசனைகள்'. வினைப்பளுவே, மனதில் வாசனையாக (நுண் எண்ணம்) இருந்து கொண்டு, அதற்கேற்பப் பலவிதமான உடலினை ஏற்றுப் பிறிவிப் பிணியில் மீண்டும் மீண்டும் பிணைக்கிறது.

பூத உடலை மரணத்தின்பொது இழந்தாலும், மெல்லுடலில் இந்த வாசனைகள் இன்னும் சுமந்திருப்பதால், அந்த வாசனைகளுக்கு ஏற்ப, மற்றொரு உடலை, உலகத்தில் ஜீவாத்மா ஏற்றுக் கொள்வது அவசியம். பூவுலகில் அப்படிப் பிறப்பதற்கான உடலைத் தேர்வு செய்வதிலிருந்து, அந்த உடலில் ஜீவாத்மா இருக்கும் வரை, மீதமிருக்கும் வினைப்பயனை அனுபவிக்கச் செய்கின்ற கரும நியதியின் பெயர்தான் 'பிராரப்த கருமம்' என்பது ஆகும்.

நான் எனும் உடல்/மனம்/உலகம் சார்ந்த ஆணவம் அழித்த காரணத்தால், செய்த, செய்கின்ற வினைகளின் பலன் இவனைப் பற்றுவதில்லை. ஆத்ம ஞானம் அடைபவன் நான் எனும் ஆணவம் அற்றவன் ஆதலால், இவ்வுடலை விட்ட பிறகு, வினைப்பளு ஏதும் அவனுக்கு இல்லாதாதலும், அவனது மனதின் வாசனை

பிரம்மமாகவே இருப்பதாலும், பிரம்மத்திலேயே கலந்து விடுகிறான். அந்த ஞானிக்குப் பிறவிப்பிணி இல்லை. இதுவே '**விதேஹ முக்தி**' எனப்படும். இத்தகையோர் கோடியில் ஒருவராக உலகில் இருப்பர்.

நாம், இவ்வுண்மையினைக் கற்பதன் மூலம், குறைந்த பட்சம், அல்லன விலக்கி, நல்லன அறியும் ஆசைகளையேனும் வளர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

நான்காம் ஸ்லோகம்

या तिर्यङ्नरदेवताभिरहमित्यन्तः स्फुटा गृह्यते
यद्भासा हृदयाक्षदेहविषया भान्ति स्वतो चेतनाः,
ताम् भास्यैः पिहितार्कमण्डलनिभां स्फूर्तिं सदा भावय
न्योगी निर्वृतमानसो हि गुरुरित्येषा मनीषा मम || 4 ||

யா திர்யங்னரதே$_3$வதாபி$_4$ரஹமித்யந்த: ஸ்பு$_2$டா க்$_3$ரு’ஹ்யதே
யத்$_3$பா$_4$ஸா ஹ்ரு’த$_3$யாக்ஷதே$_3$ஹவிஷயா பா$_4$ந்தி ஸ்வதோ சேதனா:,
தாம் பா$_4$ஸ்யை: பிஹிதார்கமண்ட$_3$லனிபா$_4$ம்’ ஸ்பூ$_2$ர்திம்’ ஸதா$_3$ பா$_4$வய
ந்யோகீ$_3$ நிர்வ்ரு’தமானஸோ ஹி கு$_3$ருரித்யேஷா மனீஷா மம || 4 ||

எவ்வறிவால் மிருகமுதல் மனிதரொடு தேவர்
எல்லோர்க்குள் தான்என்ற எண்ணம் உருவாகும்
எதனொளிபோல் மனமுடற்கண் சடமான தூலம்
ஏதறியும் ஞானமுறும் எதுயிதனால் மறையும்
எதனுணர்வு முகில்மறைத்த சூரியனாய் ஆகும்
என்றிந்தப் பேருண்மை கண்டாய்ந்து ஞானம்
அதுபிரம்மம் எனநின்று ஆய்ந்தரெவ ரெனினும்
மனமார குருஅவரென் திடமான முடிவு (4)

பொருள்:

எந்த அறிவினால் மிருகங்கள்,மனிதர்கள், தேவர்கள் என எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்கும் 'நான்' எனும் உணர்வு மிகத் தெளிவாக உணரப்படுகிறதோ, எந்த அறிவினால் மனம், ஞானேந்திரியங்கள், உடல் ஆகிய சடலப்பொருட்கள் எல்லாம் உயிர்த்துக் காணப்படுகின்றதோ, எந்த ஒளி, சூரியனால் காட்டப்பட்ட மேகமே சூரியனை மறைப்பதுபோல, தன்னால் விளக்கப்பட்ட மனதாலேயே தான் மறைக்கப்பட்டதாக இருக்கும் ஆத்மாவாக இருக்கிறதோ, அந்த நிறைவான அறிவினையே எப்போதும் தியானித்து இருப்பவரே, தன்னுள்ளே முழு நிறைவைக் கண்ட யோகி. அவரே (உலக வழக்கில் எவராக இருந்தாலும்) என்னுடைய குரு என்பது என்னுடைய நிச்சயிக்கப்பட்ட தீர்மானமான அறிவு, முடிவு.

முதல் வரி:

யா = எது (எந்த ஒரு அறிவு); திர்யங் = மிருகங்கள்; நர= மனிதர்கள் ; தே$_3$வதாபி$_4$ர் = தேவர்கள் ஆகியோருக்குள்ளும்; அஹம் இதி அந்த: = நான் எனும் உள்ளார்ந்த உணர்வு; ஸ்பு$_2$டா = மிகத் தெளிவாக; க்$_3$ரு'ஹ்யதே = உணரப்படுகிறது;

இரண்டாம் வரி:

யத்$_3$பா$_4$ஸா = எந்த அறிவினால்; ஹ்ரு'த$_3$ய, அக்ஷ, தேஹ விஷயா = மனம், கண் முதலிய கருவிகள், உடல், பொருட்கள்; பா$_4$ந்தி = உணரப்படுவது; ஸ்வத: அசே சேதனா = சடலனமானவை அறிவு பெறுவது;

மூன்றாம் வரி:

தாம் = அந்த ஆத்மா; பா$_4$ஸ்யை:= (தன்னால் ஒளிபெற்ற மேகங்களினால்) மனம் முதலிய விஷயங்கள்; பிஹிதா = மூடப்பட்ட; அர்க மண்ட$_3$ = சூரியன்; நிபாம் = உதாரணமாகும்; ஸ்பூ$_2$ர்திம் = என்றும் விளங்கிக்கொண்டிருக்கும் ஞானத்தை; ஸதா$_3$ பா$_4$வயன் = எப்போதும் தியானித்திருப்பவன்;

நான்காம் வரி:

யோகீ$_3$ = முழுமையான தியானத்தில் நிலைத்த யோகி; நிர் வ்ரித = முற்றிலும் திருப்தி அடைந்த; மானஸ = தன் மனதிலேயே; ஸஹ கு$_3$ரு: = இவரே குரு; இதி யேஷா = இந்தக் குணங்களை உடையவரே; மனீஷா மம = என்னுடைய நிச்சயித்த அறிவு.

விளக்கம்

இந்த நான்காம் பாடலும், அடுத்த ஐந்தாம் பாடலும் முதலிரண்டு பாடல்களின் விளக்கமாகவே தோன்றுகின்றன.

இந்த 'நான்' எனும் உணர்வு மனிதருக்கு மட்டுமா? மற்ற உயிர்களுக்குமா? அப்படி நான் எனும் ஆய்வைச் செய்யும்போது, உடல், புலனறிவுகள், மனம் ஆகியவையும் அறிவுடன் விளங்குவதாகத் தெரிகிறதே?

இந்த ஐயங்களை விளக்குவதுதான் இந்தப் பாடலின் முதலிரு வரிகள்.

நான் எனும் உணர்வு எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்கிறது. அதனாலேயே, தான் ஏற்ற உடலுக்கும் மனதுக்கும் ஏற்ப எல்லா உயிர்களும் செயலாற்றுகின்றன. ஆனால், இந்த நான் எனும் உணர்வின் காரணம், ஆன்மா எனும் அறிவே. அந்த அறிவினாலேயே மனம், உடல், புலனாகிய கருவிகள் எல்லாம், உயிர்த்தும், அறிவுடன் இருப்பது போலவும் தெரிகிறது. ஆன்மா இல்லை எனில், இவை அனைத்தும் சடலமே.

ஒரு ஐயம் எழுகின்றது.

இந்த ஆன்மாவின் ஒளியே மனம், உடல் என எல்லாவற்றையும் பிராகசிக்கச் செய்கிறது. அப்படி என்றால், இந்த ஆன்மாவாகிய ஒளியை நம்மால் ஏன் காண முடியவில்லை? இதற்குக் காரணம் மனம். மனமே ஆத்மாவை மறைக்கிறது. மனமே இந்த ஆத்மாவினால் பிரகாசிக்கையிலே, மனம் எப்படி ஆத்மாவை மறைக்க முடியும்? இந்த ஐயத்திற்கு ஆதிசங்கரர் சூரியனை மேகம் மறைப்பதை ஒரு உதாரணமாகக் காட்டுகிறார்.

சூரியனை மேகம் மறைப்பதில்லை. ஆனால் சூரியனைக் காணவிடாமல், நமது பார்வையைத்தான் மேகம் மறைக்கிறது. அந்த மேகம் வானத்தில் இருப்பதையே சூரியனின் ஒளியாலேயே நாம் உணருகிறோம். இதனைப் போலவே, மனதின் அழுக்கான, அறியாமையான மேகங்கள், ஆன்ம ஒளியினை நமது உள்ளார்ந்த பார்வையினால் காணமுடியாமல் மறைக்கின்றன. அத்தகைய அறியாமையை விலக்குவதே '**ஆத்ம விசாரம்**'அல்லது நான் யார் எனப்படும் தனையறியும் தவம். அதுவே யோகம்.

அத்தகைய ஒளியை, ஆன்ம அறிவை முற்றும் ஆய்ந்து, அந்த அறிவினிலேயே எப்போதும், நிலைத்து இருக்கின்றவர் எவரோ அவரே யோகி. அவரது இந்த ஞானத்தினால், தன்னுள்ளே முற்றிலும் திருப்தி அடைந்தவராக அவர் எப்போதும் இருக்கின்றார்.

அத்தகைய திருப்தியுடைய ஞானி, உலக வழக்கில் புலையனாகவோ, அந்தணராகவோ - எவராக இருப்பினும், அவரே குரு என்பது, தன்னுடைய

நிச்சயித்த திடமான அறிவு என்று ஜகத்குரு முடிவு செய்கிறார்.

தன்னை அறிதலின் முழுப்பயன், முற்றும் திருப்தி பெற்ற நிலையினை அடைதலே ஆகும். அந்த முடிவில்லாத ஆனந்த நிலையினை இங்கே பலனாகக் காட்டிய ஆதி சங்கரர், அடுத்த ஸ்லோகத்தில் ஆத்மாவின் பரமானந்த நிலையினை மேலும் விளக்குகின்றார்.

ஐந்தாம் ஸ்லோகம்

यत्सौख्याम्बुधि लेशलेशत इमे शक्रादयो निर्वृता
यच्चित्ते नितरां प्रशान्तकलने लब्ध्वा मुनिर्निर्वृतः
यस्मिन्नित्य सुखाम्बुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मविद्
यः कश्चित्स सुरेन्द्रवन्दितपदो नूनं मनीषा मम ॥

யத்ஸௌக்$_2$யாம்பு$_3$தி$_4$ லேஶலேஶத இமே ஶக்ராத$_3$யோ நிர்வ்ரு’தா
யச்சித்தே நிதராம்’ ப்ரஶாந்தகலனே லப்$_3$த்$_4$வா முநிர்நிர்வ்ரு’த:
யஸ்மிந்நித்ய ஸுகா$_2$ம்பு$_3$தௌ$_4$ க$_3$லிததீ$_4$ர்ப்$_3$ரஹ்மைவ ந ப்$_3$ரஹ்மவித்$_3$
ய: கஶ்சித்ஸ ஸுரேந்த்$_3$ரவந்தி$_3$தபதோ$_3$ நூனம்’ மனீஷா மம ॥

திரைகளிலாச் சுகக்கடலே தெளிந்தபரப் பிரம்மம்!
தெளித்ததுளி சுகபோகம் தேவானு பவமாகும்!
குறைகளிலாத் தூயமனம் குவித்தமுனி யோர்கள்
கோடிசுகம் காணுமவர் ஞானாமய யோகம்!
நிறைவிதனால் நித்யசுக நீள்கடலில் கரையும்
நேரியனே பிரம்மமினி ஞானியென இல்லை!
இறையடியே இவனடியாய் இந்திரனும் பணியும்
எவரெனினும் குருஅவரென் தீர்மான முடிவு! (5)

பொருள்

ஆத்மா எனும் பரந்த ஆனந்தக்கடலின் சில துளிகளினாலேயே, இந்திரன் முதலான தேவர்கள் குறைகளற்ற சுகபோகங்களில் ஆனந்தித்து இருக்கிறார்கள். தூய மனதுடைய முனிவர்களும், தங்களுடைய சிந்தையினாலாயே முழுமையான நிறைவினையும் இந்த ஆத்மாவின் துளியினாலேயே அடைந்து இருக்கிறார்கள். எப்போதும் நிலைத்திருக்கும் இந்த சுகக்கடலில் எவர் முற்றிலும் கலந்து, கரைந்து விடுகிறார்களோ, அவர் பிரம்மமே அன்றி, பிரம்மத்தை அறிந்தவர் அல்ல. இந்த ஞானத்தை அடைந்தவர் எவராயினும் அவரே தேவர்களின் தலைவனான இந்திரனும் வணங்கத்தக்க திருவடிகளை உடையவராக இருக்கிறார் என்பதே என்னால் கண்டிப்பாக தீர்மானிக்கப்பட அறிவு.

முதல் வரி:

யத் = எதில் (இந்த ஆத்மாவில்); ஸௌக்$_2$ய = முற்றிலும் சுகம் நிறைந்த; அம்பு$_3$தி$_4$ = கடல்; லேஶலேஶத் = துளித் துளியால்; இமே = இந்த ஆனந்தம்; ஶக்ர ஆத$_3$யோ = இந்திரன் ஆகியோர்களுக்கு (தேவர்களுக்கு); நிர் வ்ரிதா = குறைகளற்ற முழுச்சுகத்தைத் தருகிறதோ;

இரண்டாம் வரி:

யா = எது; ப்ரஶாந்த கலனே = களங்கமற்ற தூய்மையான; சித்தே ந இதராம் = சிந்தையால் மட்டுமே (அன்றி பிறவற்றால் அல்ல); லப்$_3$த்$_4$வா = எந்த அனுபவத்தை; முனிர் = (பூவுலகில்) முனிவர்கள்; நிர் வ்ரித: = முழு நிறைவை அடைகிறார்கள்;

மூன்றாம் வரி:

யஸ்மின் = எவர்; நித்ய = எப்போதும் உள்ள; ஸுக$_2$ அம்பு$_3$தௌ$_4$= (இந்தச்) சுகக் கடலில்; க$_3$லிததீ$_4$ஹீர் = முற்றிலும் கரைந்து விடுகிறார்களோ; ப்$_3$ரஹ்மைவ ந ப்$_3$ரஹ்மவித்$_3$ = (அவர்) ப்ரம்மமே (இனி) பிரம்ம ஞானி அல்ல;

நான்காம் வரி:

ய: கஶ்சித் = இப்படி எவர் இருந்தாலும்; ஸ: = அப்படி இருப்பின் (மேலே கூறியபடி); ஸுர இந்த்$_3$ர வந்தி$_3$த பதோ$_3$ = (அவரே) தேவர்களின் இந்திரனும் வணங்கும் பாதங்களை உடையவர்; நூனம் = உறுதியான; மனீஷா மம = என்னால் நிச்சயிக்கப்பட்ட அறிவு (முடிவு).

விளக்கம்

முதல் இரண்டு ஸ்லோகங்களில் ஆத்மா என்றும் நிலையானது (ஸத்) என்பதையும், அடுத்த இரண்டு ஸ்லோகங்களிலும் ஆத்மா எங்கும் நிறைந்த அறிவு (சித்) எனவும் விளக்கிய ஜகத்குரு ஆதி சங்கரர், இந்த ஐந்தாவது ஸ்லோகத்தில் ஆத்மா முழுமையான இன்ப வடிவம் (ஆனந்த ஸ்வரூபம்) என்பதனை விளக்குகின்றார். புலையனது இரண்டாவது கேள்வியில் கண்ட 'ஆத்ம ஆனந்தம்' என்ன என்பதையும், அதனை நோக்கியே அறிந்தும், அறியாமலும் எல்லா உயிர்களும் வாழ்க்கைத் தவத்தை ஏற்கின்றன என்பதையும் குறிக்கிறார்.

ஆத்மா ஆனந்த ஸ்வரூபமானது என்பதனை 'சௌக்யம்' எனும் வாக்கினால் குறிக்கிறார். வடமொழியில் 'சுகஸ்வரூபம் சௌக்யம்' என்பதன் பொருள், முற்றும் இன்ப வடிவாக இருப்பதே சௌக்கியம் என்பது ஆகும். இன்பமே எல்லா உயிர்க்கும் இயற்கை. என்றாலும் அறியாமையினால் எது இன்பம் அல்லது ஆனந்தம், அது எதனால் கிடைக்கிறது என்று புரியாமல், நாம் உலகில் ஒன்று மாற்றி ஒன்று எனப் பொருட்களிலும், செயலிலும், உறவிலும் சுகத்தைத் தேடுகின்றோம். இவ்வாறு நமக்கு வெளியில் இருப்பதாகப்பட்ட பொருட்களில் இன்பம் தேடுவதை 'விஷய ஆனந்தம்' அல்லது பொருளின்பம் என்கிறது உபநிடதம்.

மனித வாழ்க்கையின் நாம் இப்படிப்பட்ட பொருளின்பத்தில்தான் குறியாக இருக்கிறோம். பணம், நகை, வீடு, பதவி,புகழ், என எல்லாவற்றிலும் இன்பத்தை அனுபவிக்கத்தான் நாம் வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் அனுபவத்தினால், பொருளின்பத்தால் வரும் சுகம் நிலையாக இல்லை என்பதை உணரமுடிகிறது. மேலும் பொருளின்பமே துன்பமாகவும் ஆகிறது என்பதையும் அறிகிறோம். இதன் காரணம் என்ன என்று ஆராய்ந்து சொல்கிறது உபநிடதம்.

பொதுவாக நாம் விஷயானந்தம் எனும் பொருளின்பத்தை மூன்று விதங்களில் அனுபவிக்கிறோம். **அடையும் சுகம்** (ப்ரியம்), **உடமை சுகம்** (மோஹம்), **அனுபவ சுகம்** (பிரமோதம்) எனும் இம்மூன்று சுகத்திலும், துன்பமும் கூடவே வருகிறது.

முதலில் இன்பத்தைத் தருகின்றதாக ஆசைப்பட்ட பொருளை அடைய வேண்டும் என்ற வேட்கை. அந்த வேட்கைக்கு, 'ப்ரியம்' என்பது வடமொழி வார்த்தை. ஆசைப்படும் பொருள் நம் கைவசம் இல்லை என்றாலும் அதன்மீது நாட்டம், அதன் நினைவு, அதனைப் பார்க்கும் போதும், கேட்கும் போதும் எழுகின்ற உணர்ச்சி எல்லாமே ஒருவித இன்பத்தைத் தருகின்றது. பிறகு முயற்சியாலோ, வாய்ப்பாலோ, அப்பொருள் கிடைத்துவிட்டால், ஒரு இன்பம் வருகிறது. இதுவே 'மோஹம்' எனப்படுவது. பிறகு அந்தப் பொருளை அனுபவிக்கும் பொது, மற்றொரு வகையான இன்பம் கிடைக்கிறது. இதனைப் 'பிரமோதம்' என்னும் வடமொழிச் சொல்லால் அறிவர்.

அடைய நினைத்த பொருள் கிடைக்காதபோது துயரம். அடைந்த பொருளான உடமையை இழந்துவிடுவோமோ எனும் பயம், உடமையை அனுபவித்ததால் கரைந்துவிட்ட இன்பமும், படிப்படியாக அதிகரிக்கும் அனுபவக் கசப்பு. எனவே இன்பம் கொடுத்த இப்பொருட்களே துன்பத்திற்கும் காரணமாகின்றன. இதனை உணர்ந்து, மீண்டும் வேறு ஒரு பொருளில் இன்பத்தைத் தேடி நம்முடைய நாட்டம் போகிறது. நாட்கள் போகிறது. மனித வாழ்க்கையில் இன்பத்தை முழுமையாக அறியாமலேயே ஆயுளைக் கழித்தி விடுகிறோம்.

விரும்பி உண்ணும் உணவே திகட்டுகிறது. நோயாகிறது. திரட்டிய சொத்துக்களே, அச்சத்தைக் கொடுக்கிறது. ஏனென்றால் நாம் இன்பம் என்று தேடுகின்ற உலகப் பொருட்கள் முழுமை பெற்றதாக அமையவில்லை. **முழுமை பெறாத பொருட்கள் முழுமை தரமுடியாது**. அதனாலேயே எந்த இன்பமும் நம்மை முற்றும் திருப்திப் படுத்தவில்லை. இதனை மேலும் ஆராயும்போது, இன்பம் பொருளில் இல்லை, அப்பொருளின் மேல் வைத்த ஆசை முடிவதாலேயே இருக்கிறது என உணர்கிறோம். அதனால் **ஆசை விலகும்போது இன்பம் தெரிகிறது** என அறிகிறோம். அதனால், பொருளின்ப விலக்கம் அல்லது தியாகம் செய்வதால், ஆசை விலக்கம் ஏற்படுகிறது, அதனால் உயர்ந்த இன்பம் கிடைக்கிறது என்பதை அறிகிறோம். பலனை எதிர்பார்க்காத பணி என்று பகவத்கீதை விளக்குவதும் இதுவே.

தியாகம் செய்யச் செய்ய, இன்பம் ஓங்குகிறது. பலன் கருதாப் பணியும், தியாகமும் பண்பினை வளர்ப்பதால், இன்பத்தின் உயரமும் சிறப்பாக இருக்கிறது. இத்தகைய இன்பம் 'தியாகானந்தம்' அல்லது 'வைராக்யானந்தம்' எனப்படுகிறது. இதுவே பண்பட்ட மனிதர்கள் உலக வாழ்வில் தேடும் இன்பம். பொருளும், பொருள் தியாகமும் முழுமையான இன்பத்தைத் தரவில்லையே என்ற ஆராய்ந்தால், அதனால் என்ன தெரிகிறது? முழுமையான இன்பம் முழுமையான பொருளாலோ, செயலாலோதான் பெறமுடையும்.

அப்படி என்றால், எது முழுமைப்பொருள்? எது முழுமையான இன்பம்? ஆசை விலகும்போது இன்பம் வருகின்றது என்றால், ஆசையிலா மனதில் இன்பம் அதிகம். ஆசையிலா மனது சலனமில்லாத நீராக ஆன்மாவைப் பிரதிபலிக்கிறது. அப்படி என்றால், ஆன்மாவின் ஒளியினை அதிகம் பிரதிபலிக்கப் பிரதிபலிக்க, ஆனந்தம் அதிகமாகிறது. இதன் கருத்து என்ன? ஆத்மா ஆனந்த ஸ்வரூபம். எனவே, ஆத்மா எனும் இந்த முழுமையான பொருளில் நாட்டம் இருந்தால், அது மிகச் சிறந்த இன்ப அனுபவத்தைத் தரும். ஆத்மாவை நாடும் அறிவே ஞானம் என்பதால், இவ்வுலகில் நாம் அடையும் உயரிய இன்பம் 'ஞானானந்தம்' என அழைக்கப்படுகிறது.

அத்வைத ஞானத்தால், 'வேறு என்று ஒன்றில்லை, நானே ஆத்மா, நானே பிரம்மம், அதனால் வேண்டுதல் வேண்டாமை இல்லை' எனும் ஞான நிஷ்டையிலே இருந்து கொண்டே, வேறுபட்டவை போலத் தெரியும் உலக வாழ்க்கையைக் கையாளும்போது, நமக்கு அது ஒரு விளையாட்டாகவும் இன்பமாகவும் அல்லவா

இருக்கும்? ஜீவன் முக்தராக, உலக சாட்சியாக, வேண்டுதல் வேண்டாமை அற்றவராக இருப்பவரது ஞானாநந்தம் அளவிடமுடியாத முழுமையான சுகம் அல்லவா? அதனாலேயே இவ்வின்பமே உலகவாழ்வில் மிகபெரியது எனக்கூறுகின்றன உபநிடதங்கள்.

இந்த ஞான ஆனந்தத்திலேயே ஒருவர் இருப்பின், இறுதியில் அவரே, இன்பத்தை அறிபவர், நுகர்பவர் எனும் நிலையினைக் கடந்து, இன்ப ரூபமாகவே ஆகிவிடுகிறார். ஆத்மா ஸத், சித், ஆனந்தம் எனும் சச்சிதானந்தக் கடலாக இருப்பதை உணர்ந்து, அதிலேயே கரைந்து விடுகிறார். அதுவே முழுமையான இன்ப நிலை. அந்த ஆத்மசுகமே புலையனின் கேள்வியில் குறிப்பிப்பட்ட ஆனந்தக்கடல். அக்கடலில் சுகிப்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோள். எல்லா உயிர்களுக்கும் இதுவே இயற்கை, இறுதி விதி!

இந்த அறியாமுடியாக் கடினக் கருத்தை, எளிமையாக்கி, சாதி மத வேற்றுமை இல்லாத சமுதாய வளர்ச்சிக்கு ஒரு பாடமாக, எல்லா உயிரையும் சமநோக்கு எனும் பண்பினால் மதிக்கின்ற மாண்பாக, வித்யா கர்வம் எனும் அறிவுச்செருக்கை அறவே அழிக்கும் அறமாக, நாமே இறைவனாவோம் என்னும் மிகப்பெரிய சமன்பாட்டு ஞானவிளக்கமாக, தூய அறிவுப்பாதையை, மனித குலத்துக்கு உதவும் பொருட்டு, தமது நிச்சயித்த அறிவாகத் தருவதுதான், ஜகக்குரு ஆதி சங்கரரின் அரிய காப்பியம் - மனீஷா பஞ்சகம்

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

முடிவுரை

எட்டு வயதான பாலகனாக இருந்த ஆதி சங்கரர், 'நீ யார்' எனக் கேட்ட குரு கோவிந்த பாதருக்குப் பதிலாக அளித்த 'முகவுரையே', இந்த மனீஷா பஞ்சகம் எனும் உரை நூலுக்குத் தக்க 'முடிவுரை' என்பது என் பணிவு.

'நிர்வாண ஷடகம்' எனும் பெயர் கொண்ட, ஆறு பாடல்களில், தான், 'நான்' எனும் ஆணவமிழந்து, தூல, சூக்ஷ்ம, காரண உடல்களைக் கடந்து, புலனால் அறியப்படாமல், பாவம், புண்ணியம் எனும் வேறுபாடுகள் இல்லாமல், தர்மம், முக்தி எனும் குறிக்கோளுக்கு அப்பாற்பட்டு, ஜாதி மதப் பாகுபாடுங்கள் இல்லாமல், ஆசை, வெறுப்பு இல்லாமல், இன்ப துன்பங்களை அறியாமல், பிறப்போ இறப்போ எதுவுமற்று, பெற்றவரோ,உற்றவரோ எனவேறு யாருமின்றி, செயலோ, செயல்படு பொருளோ, செயற்பயனோ, செயற்பயனின் அனுபவமோ எதுவுமில்லாது, நிலையான அறிவாகிய ஆனந்தமான சிவமாக இருப்பவன் என்று எட்டு வயதான பாலகனாக இருந்த ஆதி சங்கரர், தமது நிச்சயித்த அறிவினால், 'நீ யார்' எனக் கேட்ட குரு கோவிந்த பாதருக்குப் பதிலாக அறிமுகம் செய்து கொண்ட பாடல்களே நிர்வாண ஷடகம் ஆகும்.

உண்மையை உணர்ந்தும், குருவருளே திருவருள் உய்வதற்கு அவசியம் என்பதை வலியுறுத்தவே, ஆதி சங்கரர், பிரம்ம ஞானியான கோவிந்தபாதரிடம் பணிந்து கற்றதும், பின்பு கல்விச்செருக்கு இல்லாமல், அத்வைத ஞானத்தால் திகழ்ந்த புலையனும் தமது குருவே என்று நிச்சயித்த அறிவை இந்த மனீஷா பஞ்சகத்தில் தந்த கருணையும், நமது கண்களைத் திறக்கின்ற அறிவொளியே ஆகும்.

அப்பயனே மனீஷா பஞ்சகம் எனும் அரிய நூல் நம்மை அழைத்துச் செல்லும் ஞான பூமி!

அதனால் நிர்வாண ஷடகம் எனும் ஆதிசங்கரரின் முகவுரையே இதன் முடிவுரையாகத் தரப்பட்டுள்ளது.

॥ निर्वाण षटकम् ॥

॥ நிர்வாண ஷடகம் ॥

(யார் நீ எனக்கேட்ட குரு கோவிந்த பாதருக்குப் பகவான் சங்கரர் அளித்த தன்னறி விளக்கம்)



मनो बुद्ध्यहंकारचित्तानि नाहम्

न च श्रोत्र जिह्वे न च घ्राण नेत्रे

न च व्योम भूमिर् न तेजो न वायु:

चिदानन्द रूप: शिवोऽहम् शिवोऽहम् ॥1॥

மனோ பு$_3$த்$_3$த்$_4$யஹங்காரசித்தானி நாஹம்

ந ச ஶ்ரோத்ர ஜிஹ்வே ந ச க்$_4$ராண நேத்ரே

ந ச வ்யோம பூ$_4$மிர் ந தேஜொ ந வாயு:

சிதா$_3$னந்த$_3$ ரூப: ஶிவோ(அ)ஹம் ஶிவொ(அ)ஹம் ॥1॥

இல்லைமனம்! மதியில்லை! இறுமாப்போ நினைவுமிலை!

இல்லைசெவி நாமணமும் ஈர்த்தவிழிப் புலனுமிலை!

இல்லைவெளித் தீவளியோ இருநிலமோ நீருமிலை!

நல்லறிவு இன்பஉரு! நான்சிவமே! நான்சிவமே! (1)

न च प्राण संज्ञो न वै पञ्चवायु:

न वा सप्तधातुर् न वा पञ्चकोश:

न वाक्पाणिपादौ न चोपस्थपायू

चिदानन्द् रूप: शिवोऽहम् शिवॊऽहम् ॥2॥

ந ச ப்ராண ஸஞ்ஜ்ஞோ ந வை பஞ்சவாயு:

ந வா ஸப்ததா$_4$துர் ந வா பஞ்சகோஶ:

ந வாக்பாணிபாதௌ$_3$ ந சோபஸ்த$_2$பாயூ

சிதா$_3$னந்த$_3$ ரூப: ஶிவோ(அ)ஹம் ஶிவொ(அ)ஹம் ॥2॥

இல்லையிப் பிராணன்! இயக்குமைந்து காற்றுமிலை!

இல்லைஎழு மெல்லுடல்! இருத்துமைந்து காயமிலை!

இல்லைகை கால்வாய் இனம்கழிவுக் கலனிலிலை!

நல்லறிவு இன்பஉரு! நான்சிவமே! நான்சிவமே! (2)

न मे द्वेष रागौ न मे लोभ मोहौ

मदो नैव मे नैव मात्सर्य भाव:

न धर्मो न चार्थो न कामो ना मोक्ष:

चिदानन्द रूप: शिवोऽहम् शिवोऽहम् ॥3॥

ந மே த்$_3$வேஷ ராகௌ$_3$ ந மே லோப$_4$ மோஹௌ

மதோ$_3$ நைவ மே நைவ மாத்ஸர்ய பா$_4$வ:

ந த$_4$ர்மோ ந சார்தோ$_2$ ந காமோ நா மோக்ஷ:

சிதா$_3$னந்த$_3$ ரூப: ஶிவோ(அ)ஹம் ஶிவொ(அ)ஹம் ॥3॥

இல்லைஅவா! வெறுப்பில்லை! ஈர்த்தாசைக் கலக்கமிலை!

இல்லைநான் உணர்வு!அறம் ஏதுமுக்தி வழக்கமிலை!

இல்லைமனத் தீர்விலிலை! ஈர்த்தபொருள் எதிலுமிலை!

நல்லறிவு இன்பஉரு! நான்சிவமே! நான்சிவமே! (3)

न पुण्यं न पापं न सौख्यं न दुःखम्

न मन्त्रो न तीर्थं न वेदा: न यज्ञा:

अहं भोजनं नैव भोज्यं न भोक्ता

चिदानन्द रूप: शिवोऽहम् शिवोऽहम् ॥4॥

ந புண்யம்' ந பாபம்' ந ஸௌக்$_2$யம்' ந து$_3$:க$_2$ம்

ந மந்த்ரோ ந தீர்த$_2$ம்' ந வேதா$_3$: ந யஜ்ஞா:

அஹம்' போ$_4$ஜனம்' நைவ போ$_4$ஜ்யம்' ந போ$_4$க்தா

சிதா$_3$னந்த$_3$ ரூப: ஶிவோ(அ)ஹம் ஶிவொ(அ)ஹம் ॥4॥

இல்லையிரு வினைகளிலை! இன்பமிலை! இடரிலிலை!

இல்லைமறை மொழியிலிலை! இருந்தவமோ துறவிலிலை!

இல்லையனு பவமுமிலை! இயக்கத்தில், பொருளிலிலை!

நல்லறிவு இன்பஉரு! நான்சிவமே! நான்சிவமே! (4)

न मृत्युर् न शंका न मे जातिभेद:

पिता नैव मे नैव माता न जन्म

न बन्धुर् न मित्रं गुरुर्नैव शिष्य:

चिदानन्द रूप: शिवोऽहम् शिवोऽहम् ॥5॥

ந ம்ரு'த்யுர் ந ஶங்கா ந மே ஜாதிபே$_4$த$_3$:

பிதா நைவ மே நைவ மாதா ந ஜன்ம

ந ப$_3$ந்து$_4$ர் ந மித்ரம்' கு$_3$ருர்னைவ ஶிஷ்ய:

சிதா$_3$னந்த$_3$ ரூப: ஶிவோ(அ)ஹம் ஶிவொ(அ)ஹம் ॥5॥

மரணபய மேதுமிலை! மதஜாதி பேதமிலை!

பிறந்தநிலை ஏதுமிலை! பெற்றவனாய் ஆனதிலை!

உறவுஎது! தோழமையோ உயர்குருவோ சீடரிலை!

நல்லறிவு இன்பஉரு! நான்சிவமே! நான்சிவமே! (5)

अहं निर्विकल्पो निराकार रूपो

विभुत्वाच्च सर्वत्र सर्वेन्द्रियाणाम्

न चासंगतं नैव मुक्तिर् न मेय:

चिदानन्द रूप: शिवोऽहम् शिवोऽहम् ॥6॥

அஹம்’ நிர்விகல்பொ நிராகார ரூபொ

விபு$_4$த்வாச்ச ஸர்வத்ர ஸர்வேந்த்$_3$ரியாணாம்

ந சாஸங்க$_3$தம்’ நைவ முக்திர் ந மேய:

சிதா$_3$னந்த$_3$ ரூப: ஶிவோ(அ)ஹம் ஶிவொ(அ)ஹம் ॥6॥

இல்லையுரு! குணமுமிலை! எங்கேயும் பரந்தநிலை!

எல்லையிலை! புலனறிவில் எட்டாது விரிந்தகலை!

வல்லவடி வானநிறை! வகுத்தசிறை, விடுதலையுமிலை!

நல்லறிவு இன்பஉரு! நான்சிவமே! நான்சிவமே! (6)

அன்புடன்

மீ. ராஜகோபாலன்

(rajjag@gmail.com)

www.meenalaya.org